யுவ வருஷம்

[illegible] 8 [illegible]

Feb 1935.

JL
ணு211, N27 S14
N35.8.2
186948

1160

REGD. No. M. 2302.

உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்

சைவமுந் தமிழுந் தழைத்தினி தோங்குக.



# சிவநேசன்

செந்தமிழ்த் திங்கள் வெளியீடு.

ஆண்டு அ. § பலவான்குடி—பவ—மாசி § திங்கள் எ.

| எண் | உள்ளுறை. | பக்கம். |
|---|---|---|
| க. | எண்பதாம்ஆண்டு நிறைவுவிழா ... | 157 |
| உ. | பர்மா இந்தியர் பிரச்னை ... | 159 |
| ங. | அநேகமும் அத்துவிதமும் ... | 161 |
| ச. | கிருஷ்ணன் கீதையை மறந்தது ... | 163 |
| ரு. | மருத்தன் சிவஸ்துதிசெய்து பொருள்பெற்றது | ,, |
| சு. | பாண்டவர் சிவஸ்துதிசெய்து பொருள்பெற்றது | 165 |
| எ. | தெய்வ மூர்த்த தத்துவார்த்தம் ... | 167 |
| அ. | இந்தியாவின் தற்கால அரசியல் ... | 171 |
| கூ. | சோமசுந்தர விஜயம் ... | 177 |
| க0. | சாதியைக் கெடுக்கச் சாத்தியப்படுமா? ... | 180 |
| கக. | தேவிகாலோத்ர ஆகமம் | (49—56) |

ஆசிரியர் ராம. த. ராம. இராமசாமி செட்டியார்,
பலவான்குடி.

# செய்தித்திரட்டு.

கழக விழாக்கள்:— கோயிற்பட்டி பத்திவிளை கழகம் இருபத்தைந்தாவதாண்டு விழாவும், திருவிடர் கழகம் இருபத்தோராவதாண்டு விழாவும், திருநெல்வேலி சிவாலயத்திற்கும் சிதம்பரம் நாவலர் பாடசாலைக்கும் தருமகர்த்தர் திரு. கா. சுப்பிரமணியபிள்ளை M. A. M. L. அவர்கள் தலைமை வகிக்கவும் கரந்தைச் தமிழ்ச் சங்கத்தின் இருபத்து நான்காவது ஆண்டுவிழா: மகாவித்வான் மறைத்திருவாளர், ரா. இராகவையங்காரவர்கள் தலைமை வகிக்கவும், இம்மதி ௫, ௬௨ களில் அறிஞர் பலரின் அரிய பெரிய விரிவுரைகளுடன் நிறைவேறின.

தஞ்சை சைவசித்தாந்தசபையின் ஐந்தாவதாண்டு விழா, கொரடாச்சேரி சைவ சித்தாந்த நிலயத் தலைவர், உயர்திரு சச்சிதானந்த சுவாமிகள் தலைமை வகிக்க இம்மதி ௧௩௨ பிற்பகலில் அறிஞர்களின் அரிய பெரிய விரிவுரைகளுடன் நடைபெறும்.

காசி யாத்திரை:—சென்னிமலை சிவஸ்ரீ ஈசானசிவாசார்யரவர்களும் பால்சாமியவர்களும், தேவகோட்டை திருவாளர், கரு. கி. சொர்ணநாதன் செட்டியாரவர்களும் காசி யாத்திரை செய்து விபூதி குங்குமப் பிரசாதம் தந்துள்ளார்கள்.

திருநள்ளாறு:— ஸ்ரீ சனீஸ்வர பகவான் இம்மதி ௬௨ மகராசியினின்றும் கும்பராசிக்கு எழுந்தருளும் மகோத்ஸவம் சிறப்பாக நடைபெற்றது.

பொங்கல் நன்மொழி:— சென்னை தொண்டை மண்டலம் பாடசாலை ஆசிரியர் திரு. அ. தம்பிரான் முதலியாரவர்கள் அனுப்பிய மங்கல வாழ்த்து வரப்பெற்று மகிழ்வுற்றோம்.

பெரியகாஞ்சீபுரம்:—"குமார விகடன்" 'குமரன் அச்சகம்' தொழிலாற்றுவதற்கென்று நெல்லுக்காரத் தெருவில் அமைக்கப்பெற்ற 60-B எண்ணுள்ள புதிய கட்டிடத்தை சென்னை "சுதேசமித்திரன்" ஆசிரியர், திரு. C. R. சீனிவாசன் அவர்கள் தை உ௮௨ திறந்துவைத்தனர். சென்னை, திரு. வி. கல்யாணசுந்தர முதலியாரவர்கள் தலைமையில் பேறிஞர்களின் விரிவுரைகளும் இசை முழக்கங்களும் நிகழ்ந்தன.

சென்னை:— தனவணிக நகரத்தார்களின் பழய வீட்டிலிருந்தும், புதிய வீட்டிலிருந்தும் தெண்டாயுதபாணிக் கடவுள் இம்மதி உ௨ திருவொற்றியூருக்கு எழுந்தருளி ௬௨ முதல் ௬௨ வரை மகேஸ்வர பூஜையாதிய வுவந்து அன்றிரவு தமதிருக்கை சேர்ந்தருளினர்.

இந்தியன் பாங்கில் (10—2—1935) வருஷாந்தர பொதுக் கூட்டத்தில் திருவாளர், மு. சித. மு. சிதம்பரஞ் செட்டியாரவர்கள் பின்னையும் டைரக்டராக நியமனம் பெற்றுள்ளார்கள். இவர்களின் அரும்பெறல் தந்தையார் காலத்திலிருந்து தொடர்ந்து நிர்வகித்து வருதல் போற்றுந் தகையதே.

உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்

சைவமுந் தமிழுந் தழைத்தினி தோங்குக.



# சிவநேசன்.

## செந்தமிழ்த் திங்கள் வெளியீடு.

பலவான்குடி.

| | | |
|---|---|---|
| ண்டு அ | பவ—மாசி: 1935—பீப்ரவரி | திங்கள் எ. |



டயா னொன்ற னடுவிருக்கு முடையா னடுவு ணீயிருத்தி
அடியே னடுவு ளிருவீரு மிருப்ப தானா லடியேனுன்
அடியார் நடுவு ளிருக்கும்அரு ளைப்புரி யாய்பொன் னம்பலத்தெம்
முடியா முதலே யென்கருத்து முடியும் வண்ணம் முன்னின்றே.

## ஸ்ரீ மஹாமஹோபாத்தியாய
## டாக்டர் உ. வே. சாமிநாதையரவர்களின்
# எண்பதாம் ஆண்டுநிறைவு விழா.

அன்பார்ந்த ஐயா,

மஹாமஹோபாத்தியாய தாக்ஷிணாத்ய கலாநிதி டாக்டர் உ. வே. சாமிநாதையர் அவர்களுக்கு 1935-ம் ௵ மார்ச்சு மாதம் 6-ம் தேதி எண்பதாவது ஆண்டு பூர்த்தியாகின்றது.

நம்முடைய தமிழ்மொழியும்இலக்கியமும்அபிவிருத்தியாவதற்கு அறுபது ஆண்டுகளாக ஐயரவர்கள் மதிப்பரிய தொண்டுகளைச் செய்து வந்திருப்பதை யாவரும் நன்கறிவர். தம்முடைய மெய் வருத்தங்களை ஒரு சிறிதும் பொருட்படுத்தாமல், தனியாகவே இருந்து சங்ககாலத்து அரிய பெரிய நூல்களைப் பாதுகாத்து ஆராய்ந்து பிழையறப் பரிசோதித்துப்பதிப்பிக்கும் பெருஞ்செயலைச் செய்திருக்கிறார்கள்.

அவர்கள் செய்துள்ள பேருதவியினாலேயே பண்டைத் தமிழரின் நாகரிகத்தையும் பெருமையையும்நாம் இப்பொழுது அறிந்திருக்கிறோம். நமது தொன்மையைக் குறித்து நாம் நியாயமாகப் பெருமை பாராட்டிக் கொள்வதற்கு அவர்களே முக்கிய காரணமாக உள்ளார்கள். அவர்கள் தமிழுக்குச் செய்துள்ள ஒப்புயர்வற்ற தொண்டுகளைத் துரைத்தனத்தாரும் சர்வகலாசாலையாரும் நன்கு

மதித்து மஹாமஹோபாத்தியாயர், டாக்டர் என்னும் பட்டங்களை அவர்களுக்கு அளித்துக் கௌரவித்திருக்கிறார்கள்.

தமிழ்ப் பாஷாபிமானிகளும் கல்வியின் மேம்பாட்டைக் கருதுவோரும் தமிழ்ப் பெரியாராகிய ஐயரவர்களின் எண்பதாவது ஆண்டு நிறைவுவிழாவைக் கொண்டாட விரும்புவார்கள் என்பது திண்ணம்.

பிறநாடுகளிலே கல்வித்துறைகள் பலவற்றில் மேம்பாடுற்ற பெரியார்களின் வாழ்க்கையில் இவ்வகையான சந்தர்ப்பங்களை மிகவும் சிறப்பாகக் கொண்டாடுகிறார்கள். அவர்களின் ஞாபகார்த்தமாகக்கட்டுரைத் தொகுதிகளை வெளியிட்டு உருவச்சிலைகளை நிறுவி, உபகாரநிதிகளையும் அமைத்துப் பலவாறாகப்பாராட்டுகிறார்கள்.

தமிழ்மக்களுக்கு ஐயரவர்களிடமுள்ள நன்றியறிவைப் புலப்படுத்துவதற்கும், சிறந்த பாஷா விற்பன்னராகவும் போதகாசிரியராகவும் பதிப்பாசிரியராகவும் இருந்து நெடுங்காலமாக அவர்கள் செய்துவரும் அருஞ்செயல்களைப் பாராட்டுவதற்கும் இது தக்க சமயமாகும்.

ஆதலால் மார்ச்சு மாதம் 6-ம் தேதி புதன்கிழமை மாலை 5-மணிக்கு, ஐயரவர்களுக்கு உபசாரப்பத்திரம் ஒன்று அளித்தும், அவர்களுடைய உருவப் படத்தைச் சென்னைச் சர்வகலாசாலை மண்டபத்தில் நிலைபெற வைத்தும், அவர்கள் செய்துவரும் நூற்பதிப்பு வேலைகள் தொடர்ச்சியாக நடைபெற்று வருவதற்குரிய ஏற்பாடுசளைச் செய்தும், பொருளுதவி செய்வோர் கருத்துக்கு ஒத்தபடி வேறு உசிதமானவற்றைச்செய்தும், அவர்களை இச்சமயம் பாராட்ட எண்ணியிருக்கிறோம்.

இந்த விழாவிலே தாங்களும் கலந்து கொள்வீர்களென்று நம்புகிறோம். தங்கள் உடன்பாட்டையும் தங்களுடைய கருத்துக்களையும் தெரிவிப்பதோடு தங்களாலான பொருளுதவியையும் செய்யும்படி வேண்டிக்கொள்ளுகிறோம்.

பணம் அனுப்ப விரும்புவோர்கள் மயிலாப்பூர், வடக்கு மாட வீதியிலுள்ள ஸ்ரீமான் கே. வி. கிருஷ்ணசாமி ஐயரவர்களுக்கு அனுப்பலாம். பொருளுதவி செய்வோரின் கூட்டமொன்று மார்ச்சு மாதம் முதல் தேதி வெள்ளிக்கிழமை மாலை $5\frac{1}{2}$-மணிக்கு தேனாம்பேட்டை மௌப்ரேஸ்ரோட்டில், தலைவர் கனம் பி. டி. ராஜனவர்கள் வீட்டில் நடைபெறும். தாங்கள் அச்சமயம் வந்திருந்து விழாவைச் சிறப்பாக நடத்துவதற்கு வேண்டியனவற்றைச்செய்வீர்கள் என்று எதிர்பார்க்கிறோம்.

* என சென்னையிலிருந்து ஷை விழாவை விமரிசையாகக் கொண்டாடமுன்வந்துள்ள கூட்டத்தினரின் தலைவர், கனம். பி. டி. ராஜன்; காரியதரிசிகளாக [illegible] சேதுபிள்ளை; பெ. நா. அப்புஸ்வாமி; எஸ் வையாபுரிப் பிள்ளை: பொக்கிஷதார், ராவ்பஹதூர் கே. வி. கிருஷ்ணஸ்வாமிஐயர் ஆகிய மேன்மை மிக்க பெரியார்கள் தெரிவித்துக்கொள்கிறார்கள்.



"தோன்றிற் புகழொடு தோன்றல்" "இசைபெற வாழ்தல்" என்பனவாதிய அருமைத் திருவாக்குகளுக்கு இலக்கியமாக கல்வி அறிவு ஒழுக்கங்களின் நிலைக்களமாக, தமிழ்த்தாயின் அருமைத் திருமகனாக, தமிழ் உலகத்திற்குத் தலைவராக, தமிழர்பெருநிதியாக, செந்தமிழ்த்தெய்வமாக, வையகம்புகழும்நமது ஐயரவர்களின் எண்பதாம் ஆண்டு நிறைவு விழாவைக் கொண்டாட வேண்டியது நமது கடமை யென்பதை யுணர்ந்து முன்வந்த கூட்டத்தினர்க்கு நன்றி பாராட்டுவதுடன் நாமும் அதிற் கலந்துகொள்ளவும், எல்லாவகையானும் விழா இனிது நிறைவேறவும் தமிழ்முனிக்கருளும் முருகவேள் திருவருள் துணைபுரிய வேண்டுவோமாக!

## பர்மா இந்தியர் பிரச்னை.

கனம் செட்டி நாட்டு ராஜா ஸர் அண்ணாமலை செட்டியாரவர்கள் தமது இங்கிலாந்துப்பிரயாணத்தைப் பற்றிக் கூறியதாவது:-

பர்மா இந்திய தூதுக்கோஷ்டியில் ஒரு அங்கத்தினராக நான் இங்கிலாந்து செல்லுகிறேன். சிலர் 2-2-35 சனிக்கிழமை புறப்பட்டுவிட்டனர். நான் 11—2—1935 பம்பாயில் விக்டோரியா கப்பலில் பிரயாணமாகிறேன்.

கூட்டுக் கமிட்டி யாதாஸ்துப்படி பர்மா இந்தியர்களுக்கேற்படும் நிலைமையைப் பற்றி இந்தியா மந்திரிக்குத் தெரிவித்து பிரிவினையான பர்மாவிலும் இப்பொழுது அவர்களுக்கிருக்கிற உரிமைகளை நீடித்து வருமாறு முயற்சிப்பது எங்கள் உத்தேசமாகும். பர்மாவில் 10 லக்ஷம் இந்தியர்களுக்கு மேலிருக்கின்றனர். அவர்களுக்கு அங்கிருக்கும் நலவுரிமை மகத்தானதாகும். பர்மா தற்கால ஸ்திதியடைந்திருப்பதற்கு இவர்கள் செய்திருப்பது எல்லோரும் ஒப்புக்கொள்ளக்கூடியவகையில் மிகுதியாகுமென்பதில் சந்தேகமில்லை. பர்மிய அபிவிருத்தியில் செட்டியார் வகுப்பினர் விசேஷப் பங்கு கொண்டிருக்கின்றனரென்பது யாராலும் மறுக்கமுடியாதது. பர்மாவின் மாஜிகவர்னரான ஸர் ஹார்கோர்ட்டு பட்லருள்பட உயர்தர கவர்ன்மெண்டு உத்தியோகஸ்தர்களும், பல வேறு பொது ஸ்தாபனங்களும் அந்த மாகாணத்தின் விவசாயம், வியாபாரம், வர்த்தகம், கைத்தொழில் ஆகியவற்றின் அபிவிருத்தியில் இவர்கள் பெரிதும் உதவியிருக்கின்றனரென்பதை வெகுவாகப் பாராட்டியிருக்கின்றனர். கூட்டுப் பிரதேசங்களை யெல்லாம் இப்பொழுதுள்ள வண்ணம் அழகிய சாகுபடி நிலமாகச்செய்ததெல்லாம் செட்டியார்களுடைய மூலதனமாகும். 80 கோடி ரூபாய் போல இவர்கள் அங்கு மூலதனம் போட்டிருக்கின்றனர். இது தவிர

1869448

அம்மாகாணத்திற்கு நிலவரி, வருமானவரி, முதலிய பல வேறு வரிகள்மூலம் ஒருகோடி ரூபாய்க்குமேல் வருஷாவருஷம் செலுத்தி வருகின்றனர். இத்தேசம் இந்தியாவினின்று பிரிக்கப்படுமென இவர்கள் கனவிலும் நினைத்திருக்கவில்லை யாதலாலும், இம்மாதிரி அவர்களுக் கெதிரான தடைக ளேற்படுத்தப்படுமென இவர்கள் எதிர் பார்ப்பதற்கே இல்லாமலிருந்ததாலும் இவர்கள் இவ்விதம் தாராளமாகப் பணத்தை அங்கு செலவிட்டனர். லேவாதேவியாகக் கொடுத்த வகையில் நிலம் இவர்கள் வசமாக நேர்ந்திருக்கிறது. இப்பொழுது அவர்கள் மன மின்றியே நிலச்சொந்தக்காரர்களாக விருக்கின்றனர். இது அவர்கள் நிவர்த்திக்கக்கூடாத காரணத்தினால் ஏற்பட்டதாகும். எந்தப்பாங்கரும்தமதுரொக்கப்பணத்தை நிலத்தில் போட்டுமடக்க நினைக்கமாட்டார். ஆனால் அங்கு இந்த துரதிர்ஷ்ட நிலைமை அவர்களுக்கு ஏற்பட்டிருக்கிறது. ஆகவே அவர்கள் நில ஆக்ரமிப்புச் செய்யவேண்டுமென விரும்புவதாகக் கூறுவது கொடுமையாகும். கூட்டுக் கமிட்டி யாதாஸ்து இதைத்தான் செய்திருக்கிறது. நில முதலிய சொத்துக்களை விற்பதில் தடை ஏற்படுத்த பர்மிய சட்டசபைக்கு அதிகாரமிருக்கவேண்டுமென அக்கமிட்டி சிபார்சு செய்திருக்கிறது.

செட்டியார்கள் பொறுப்பைக் கழிக்க வேண்டியிருக்கிற தென்பதை மறப்பதற்கில்லை. அவர்கள்மூலதனம் பிறரிடம் வாங்கப் பட்ட கடன் தொகையும் உள்ளிட்டதாகும். இவர்கள் தங்கள் கடன்களைத்தீர்ப்பது இவர்களிடம் கடன் வாங்கிய பர்மியர்கள் தங்கள் கடனைத்தீர்ப்பதைவெகுதூரம் பொறுத்திருக்கிறது. கூட்டுக் கமிட்டி யாதாஸ்து சிபார்சு அங்கீகரிக்கப்படுமாயின் லேவாதேவி சௌகரியங்கள் வெகுதூரம் பாதிக்கப்படும். செட்டியார் வகுப்பு முழுவதற்கும் பெரிய அனர்த்தமேற்படக்கூடும்.

பிரிவினை செய்யப்பட்ட பர்மாவில் அவ்விதம் பாதகமான சட்டஞ்செய்யப்படாமல் சட்டரீதியானபாதுகாப்புகள் எங்களுக்கு அளிக்கப்பட வேண்டும். எங்கள் கக்ஷி நியாயமானதாகும்; மறுதளிக்கக்கூடாததாகும். பிரிட்டிஷ் ஜனங்களின் நியாயபுத்தியில் எனக்கு மிகுந்த நம்பிக்கையுண்டு. எங்கள் தூதுக் கோஷ்டியிடம் ராஜப் பிரதிநிதிக்கும் லார்டு எர்ஸ்கினுக்கும் அநுதாப மிருக்கிறது. பர்மாவில் நமது நிலைமைபூராவாக இந்தியாமந்திரிக்கும் கூட்டுக் கமிட்டிக்கும் எடுத்துரைக்கப் படவில்லையென நினைக்கவேண்டி யிருக்கிறது. எல்லாத் தகவல் களையும் எடுத்துரைத்து நமது கோரிக் கைகள் நியாயமானவையென இந்தியாமந்திரிக்கும் மற்ற கமிட்டி மெம்பர்களுக்கும் படும்படி எடுத்துக்காட்ட முடியுமென தூதுக் கோஷ்டி நம்பிக்கை கொண்டிருக்கிறது. இந்தியா மந்திரி மிகத் திறமைசாலியானதால் எங்களுக்கு அவர் நியாயஞ் செய்ய முடியும் என்ற நம்பிக்கை இருக்கிறது.

---

உ

# அநேகமும் அத்துவிதமும்.

(பொன்னேரி பிரம்மஸ்ரீ தி. மா. ஸ்ரீநிவாச ஐயங்காரவர்கள்)

துவிதம் என்பது சமஸ்கிருதபதம். அப்பாஷையிலுள்ள மற்றப் பதங்கள்போல் அப்பதமும் ஒரு சாமானியபதந்தான். அதனர்த்தம் இரண்டு என்பது. அப்பதத்தின் முன் ந என்னும் எழுத்துச் சேர்ந்தது. அதனால் அத்துவிதம் என்றபதம் உண்டாயிற்று. ந - துவிதம்-அத்துவிதம். ந அவ்வானது வடமொழி வியாகரணம். அந்த நகாரம் மற்றப்பதங்களோடு சேருங்காலத்தி லெல்லாம் அதிகசத்தி யொன்றையும் பெறவில்லை. ஆனால் அது துவிதபதத்தோடு சேரவே விசேடசக்தியைப் பெறலாயிற்று. சம்ஸ்கிருத பாஷாவிற்பன்னர் பலருக்கு அது தன்பொருளைக் காட்டாமல் மறைத்துக் கொண்டது. அதன் பொருளை அறியமாட்டாதல்லற் பட்டவர் ஒருவரா? இருவரா? எத்தனையோபேர். ஆயினும் முக்கியராவார் மூவர். அம் மூவரும் அந் நகாரார்த்தத்தை எவ்வளவுக் கெவ்வளவு அறியாமல் மயங்கினார்களோ அவ்வளவுக் கவ்வளவு அவ்வெழுத்தை அர்த்தம் பண்ணிவிட்டதாகப் பிரமாதப் படுத்தினார்கள். படுத்தவே அவரோடு அவ்வெழுத்தும் அவ்வெழுத்தோடு அவரும் முட்டிக்கொண்ட சத்தங்கள் பல பாஷ்யங்களாய்ப் பரிணமித்தன. அவற்றாற் பாத கண்டம் படைத்தபயனென்ன? அப்புண்ணிய பூமி தன் ஸநாதன தர்ம மாகிய வைதிகசைவத்தை ஆசரித்து ஆநந்தம் அநுபவிக்கமாட்டாமல் வையப்பையஇழந்துவருவதேகண்டபலன், என்னே அந்நகாரத்தின் அதிகாரம்! இனி அம்மூவர் சங்கரரும், ராமாநுஜரும், மத்துவருமாவர். அவர்கள் அவ்வத்துவித பதத்திற்குக் கெதாதுகெதிக நியாயமாய் இரண்டில்லை, ஒன்றேயுண்டு என்று வண்ணப்பொருள் பண்ணிவைத்து விட்டுப்போனார்கள். அத்துவிதம் என்பதோடு இனப்பட்டது அநேகம் என்னும் பதம். அம்மூவர் அவ்வத்துவிதத்துக்கு வியாக்கியானம் பண்ணியமுறையில் நாம் இவ்வநேகத்துக்கும் வியாக்கியானம் பண்ணிப் பார்க்கலாம்.

அம்மூவர்:—ந - துவிதம்—அத்துவிதம். துவிதம்—இரண்டு. அத்துவிதம்—இரண்டில்லை.

நாம்:—ந-ஏகம்-அநேகம். ஏகம்—ஒன்று. அநேகம்—ஒன்றில்லை.

அ:—இரண்டில்லையென்பதற்கு ஒன்றுண்டு என்பது அர்த்தம்.

நா:—ஒன்றில்லையென்பதற்கு முக்காலுண்டு என்பது அர்த்தம்.

அ:—ஒன்றில்லையென்பதற்கு முக்காலுண்டு என்ற அர்த்தம் தப்பு. ஒன்றுக்குமேல் இரண்டு மூன்று முதலிய பலவுள்ளனவென்று அர்த்தம் சொல்லவேண்டும்.

நா:—இரண்டில்லையென்பதற்கு ஒன்றுண்டு என்ற அர்த்தமும் தப்பு. இரண்டுக்குமேல் மூன்று நான்கு முதலிய பலவுள்ளனவென்றே அர்த்தஞ் சொல்லவேண்டும்.

அ:— மூன்று நான்கு முதலியவற்றில் இரண்டு அடங்கியிருக்கிறது. ஆகையால் அத்துவிதம் என்பதற்குப் பலவுளவென்ற அர்த்தங் கூடாது. ஒன்றில் இரண்டு அடங்கவில்லை. ஆகையால் ஒன்றுண்டு என்ற அர்த்தமே சரி.

நா:— இரண்டு மூன்று முதலியவற்றில் ஒன்று அடங்கியிருக்கிறது. ஆகையால் அநேகம்என்பதற்குப்பலவுளவென்ற அர்த்தங் கூடாது. முக்கால் அரை முதலியவற்றிற்றான் ஒன்று அடங்கவில்லை. ஆகையால் முக்காலுண்டு அரையுண்டு என்றஅர்த்தமே சரி.

அ:— அப்படியானால் அத்துவித மென்பதற்கும் முக்காலும் அரையும் அர்த்தமாகலாம் போலும்.

நா:—ஏன் ஆகலாகாது? அவற்றிலும் இரண்டு அடங்கவில்லைத் தானே.

இவ் விவகாரத்தால் அத்துவித மென்பதற்கு அம்மூவர் கொண்ட எண்ணுப்பொருள் முழுப்பிழையென்பதுநன்குவிளங்கும். ஆனால் அந்நகரம் எல்லார்க்குமே தன் பொருளைக் காட்டாவிடில் அத்துவிதம் என்றபதம் அன்றே செத்துப்போயிருக்கும். ஆகலின் சில மஹர்ஷிகளுக்கேனும் அது தன் பொருளைக் காட்டிவைத்தல் அவசியமாயிற்று. அம்மகர்ஷியர்கள் கண்ட மெய்ப்பொருள்தான் யாதோவெனில் ஈதோகூறுதும். உடம்பு ஒரு பொருள். கை, கால், தலை முதலியனவாக அதனை வேறு வேறு பல பொருள்களாகவுங்கருதலாம். இப்படிஒன்றுபலவாதல்கருத்தில் மட்டும் உண்டு. அங்ஙனமின்றி உடலைத் தலைவேறு கால்வேறாகச் செயலிற் பிரித்தால் உடல் போய்விடும். இப்படிப் பிரிக்க முடியாத பன்மைக்கும் அதனையுடைய ஒருமைக்கும் உள்ள சம்பந்தம் தாதாத்மியசம்பந்தம் எனப்பெயர்பெறும். அப்படியே உடம்புஉயிர் என்பன வேறுவேறுபொருள்கள். அவ்விரண்டும் பிரிந்து நில்லாமல் உடம்பே உயிர் உயிரே உடம்பு என்னுமாறு இணைந்து ஒரு பொருள் போல் நிற்கின்றன. அவற்றுள் உடல் கெடின் உயிர் போம். உயிர்போயின் உடல் கெடும். இப்படிப் பிரிக்க முடியாத நிலையில் ஒரு பொருளுக்கும்மற்றொருபொருளுக்கும் உள்ளசம்பந்தம் அத்துவித சம்பந்தம் எனப் பெயர்பெறும். இந்தச் சம்பந்த விசேடமேஅத்துவிதம்என்பதன்சத்தியார்த்தம். அநேகமென்பதைத் திருஷ்டாந்தமாகக் காட்டி இச்சம்பந்தப் பொருளைத் தப்பெனக் காட்ட முடியாது. வழக்கில் அநேகம் என்பது ஒன்றடங்கிய பன்மையைக் காட்டும். அப்படியே அத்துவிதம் என்பதும் இரண்டடங்கிய ஒருமையைக் காட்டும். இங்ஙனம் அத்துவித பதத்துக்கு இரண்டில்லை ஒன்றுண்டு என எண்ணுப் பொருள் கூறுவது தப்பு; இரண்டல்லாத நிலை எனச் சம்பந்தப் பொருள் கூறுவதே சரியெனக் கண்ட அம்மகர்ஷிகள் வைதிக, சைவசித்தாந்த ஞான பாநுக்களாவார்கள்.

---

உ

# கிருஷ்ணன் கீதையை மறந்தது.

(சிறந்த சமஸ்கிருத பண்டிதர் பலரால் மொழிபெயர்க்கப்பட்டதும் சென்னை இந்தியா அச்சுக்கூடம் 1926ம் வருஷப் பதிப்புமான ஆஸ்வமேதிக முதலிய பர்வங்களிலிருந்து பொன்னேரி பிரம்மஸ்ரீ தி. மா. ஸ்ரீநிவாச ஐயங்காரவர்கள் எழுதியவைகள்.)

## ஆஸ்வமேதிக பர்வம் 17-வது அத்யாயத்திற் கண்டது.

அர்ஜுனன் வாஸுதேவருடன் பின்வரும் வசனத்தைச் சொல்லலானான். 'தேவகியின் மைந்தரே! யுத்தம் நேர்ந்தபொழுது உம்முடைய மகிமையையும் ஈஸ்வர ஸ்வரூபத்தையும் நான் தெரிந்துகொண்டேன். முன்பு நீர் அன்புடன் சொன்ன விஷயத்தையெல்லாம் மனத்தில் கவலையுற்ற நான் மறந்துவிட்டேன். எனக்கு அந்த விஷயங்களை அடிக்கடி (கேட்க) மிக்க அவா இருக்கிறது' என்றான். வாஸுதேவர் மறுமொழி கூறலானார். 'பார்த்த! நான் உனக்கு ரஹஸ்யமும் ஸநாதனமுமான தர்மத்தின் ஸ்வரூபத்தையும் சாஸ்வதமான எல்லா உலகங்களையும் சொல்லித் தெரிவித்தேன். நீ புத்திக் குறைவால் அதனை மனத்தில் தரிக்காதது எனக்கு மிகப் பெரிய அப்பிரியமாக இருக்கிறது. இப்பொழுது, மறுபடியும் அது எனக்கு நினைவுக்குவரமாட்டாது. நீ ஸ்ரத்தையில்லாதவனும் புத்தி கெட்டவனுமாயிருக்கிறாய். இது நிச்சயம். தனஞ்செய! மறுபடியும், முழுதும் சொல்ல முடியாது. அந்தத் தர்மமோ ப்ரம்மத்தின் ஸ்தானத்தை அறிவதற்கு மிகவும் போதுமானது. அதனை முழுதும் மறுபடியும் அவ்வாறே சொல்ல என்னால் முடியாது. நான் சித்தத்தை ஒரு வழிப்படுத்தி அந்தப் பரம்பிரமத்தை யன்றோ சொன்னேன்!' என்றார்.

## மருத்தன் சிவஸ்துதி செய்து பொருள்பெற்றது.

### ஆஸ்வமேதிக பர்வம் 8-வது அத்தியாயத் திரட்டு.

(மருத்தனுக்கு ஸம்வர்த்தர் பின்வருமாறு உபதேசித்தார். "இமயமலைச் சாரலில் முஞ்சவான் என்கிற ஒருமலை இருக்கிறது ராஜரிஷியே! நீ அவ்விடம் சென்று சங்கரரை அதிக பக்தியுடன் அருகில் சென்று வந்தனம் செய். எல்லா வித்தைகளையும் தரிப்பவரான அந்தத் தேவரைப் பின்வரும் நாமங்களால் ஸ்தோத்திரஞ் செய். ருத்ரரும் கறுத்த கழுத்துள்ளவரும் அழகிய ரூபமுள்ளவரும் நல்லகாந்தியுள்ளவரும் ஜடையுள்ளவரும் பயங்கரரும் பொன்னிறமான கண்களுள்ளவரும் வரமளிப்பவரும் முக்கண்ணரு

சூரியனுடைய பற்களைத் தகர்த்தவரும் குள்ளரும் சுபமளிப்பவரும் (எல்லாவற்றையும்) அடக்குபவரும் அவ்யக்தமான ரூபமுள்ளவரும் நல்லநடையுள்ளவரும் சங்கரரும் க்ஷேமத்தைச் செய்பவரும் பொன்னிறமான தலைமயிருள்ளவரும் ஸ்தாணுவும் புருஷரும் முண்டரும் கோபமுள்ளவரும் (ஸம்ஸாரத்தினின்று) கரை யேற்றுபவரும் பிரகாசிப்பவரும் ஸத்குருவும் தேவதேவரும்வேகமுள்ளவரும்தலைப்பாகை யுள்ளவரும் நல்ல முகமுள்ளவரும் ஆயிரம் கண்களுள்ளவரும் எல்லாவற்றையும் படைக்குந் தன்மையுள்ளவரும் மலையில் சயனிப்பவரும் மிக்க சாந்தரும் ஸன்யாஸியும் மரவுரியை ஆடையாகக்கொண்டவரும் வில்வதண்டம் தரித்தவரும் ஸித்தரும் எல்லாரையும் சிக்ஷிப்பவரும் (யாகபாகிற மானை அடிக்கும்) வேடுவரும் மஹானும் வில்லுள்ளவரும் சிறந்தவரும் சந்திரன் போன்ற முகமுள்ளவரும் ஸித்தர்களின் மந்திரமாயிருப்பவரும் (உலகத்திற்குக்) கண்ணாக இருப்பவரும் பொன்மயமான கைகளுள்ளவரும் உக்ரரும் திசைகளுக்குப் பதியும் (கடைவாய்களை) அடிக்கடி நக்கிக் கொள்பவரும் ஜீவர்கள் இருக்குமிடமும் மந்திர ஸித்தியுள்ளவரும் வ்ருஷ்ணியும் பசுக்களுக்குப் பதியும் பூதங்களுக்குப் பதியுமான சிவனுக்கு நமஸ்காரம். வ்ருஷரும் மாத்ரு பக்தியுள்ளவரும் படைத் தலைவரும் மத்தியஸ்தரும் (பக்தர்களை) எதிர்பார்க்கும் முகமுள்ளவரும் பதியும் எல்லாத் தேஜஸ்வரூபியும் ஸ்ருவத்தைக் கையில் கொண்டவரும் பதியும் பார்க்கவரும் பிறப்பற்றவரும் விரூபமான கண்களுள்ளவரும் சூரிய கோரப் பற்களுள்ளவரும் தீக்ஷ்ணரும் அக்னியை முகத்தில் கொண்டவரும் மஹாத்மாவும் அனங்கரும் எல்லாமாக இருப்பவரும் ஜனங்களுக்குப் பதியும் பருத்தவரும் தோலை உடுப்பவரும் மிகச் சிவந்தவரும் பிரகாசிப்பவரும் தன்னைத் தேவதையாகக் கொண்டவரும் யானைத் தோலை வஸ்திரமாகக் கொண்டவரும் கபாலமாலையுள்ளவரும் ஸுவர்ணகிரீடம் தரித்தவரும் மஹாதேவரும் க்ரூரத்தன்மையற்றவரும்க்ரூரத்தன்மையற்ற செய்கைகளுள்ளவரும் ஸ்வதாஸ்வரூபியுமான சிவனுக்கு நமஸ்காரம். பினாகியும் மஹாதேவரும் த்ரியம்பகரும் த்ரிபுரத்தை அழித்தவரும் ஈசானரும் சங்கரரும் ஸர்வரும் சிவரும் விஸ்வேஸ்வரரும் பவரும்உமாபதியும்பசுபதியும் விஸ்வரூபரும்மஹேஸ்வரரும் விரூபாக்ஷரும் வ்ருஷபத்வஜரும் உக்ரரும் ஸ்தாணுவும் ரௌத்ரரும் கௌரீசரும் ஈஸ்வரரும் நீலகண்டரும் அஜரும் மன்மதனுடைய சரீரத்தை அழித்தவரும் சரண்யரும் நான்குமுகமுள்ளவருமான பரமசிவனைத் தலை வணங்கிச் சரணமடைவாயாக". அரசனே! "ஆதியும் அந்தமும் அற்றவரும் முக்குணங்களும் அற்றவரும் நிர்மலருமான சங்கரரை நமஸ்கரித்து அஞ்சலி செய்து கொண்டு அவரைச் சரணமடைகிறேன். நன்குபூஜிக்கத்தக்கவரும் சலனமற்றவரும் நித்தியரும் (பாவிகளிடத்தில்) கருணையற்றவரும் உபநிஷத்



ஸ்வரூபியுமான அவரை அடைந்து அடிக்கடி சரணமடைகிறேன். ஆத்மஸ்வரூபத்தைத் தியானிப்பவர்கள் எவருடைய அழிவற்ற ஸ்தானத்தை மோக்ஷமாகக் கருதுகின்றனரோ எவரைத் தத்வமார்க்கத்திலிருப்பவர்கள்யோகிகளுக்குஈசராகவும் அழிவற்றமோக்ஷஸ்தானமாகவும் முக்தர்கள் அன்புள்ளவராகவும் ஸமமாகப் பார்ப்பவர்கள் (எங்கும்) ஸமமாக இருப்பவராகவும் கருதுகிறார்களோ, உலகங்களுக்கு உத்பத்தி காரணரும் தமக்கு உத்பத்தி காரணமில்லாதவரும்நிர்க்குணஸ்வரூபமுள்ளவருமான அவரைச்சரணமடைகிறேன்; ஸனாதனரான அவரைச் சரணமடைகிறேன்; பக்தர்களுக்கு எளிதில் அடையக் கூடியவரும் பக்தியில்லாதவர்களுக்கு அடைய முடியாதவரும் பிரகிருதிக்கு அப்புறத்திலிருப்பவருமான அவரை நமஸ்கரிக்கிறேன்; சரணமடைகிறேன் என்று இவ்விதம் (மஹாதேவருக்கு) நமஸ்காரம் செய்து ஸுவர்ணத்தை அடைவாய். மனிதர்கள் அவரிடத்தில் மனத்தைச் செலுத்திக் கணங்களுக்குப் பதியாயிருக்குந் தன்மையையும் அடைகின்றனர். ஸுவர்ண பாத்திரங்களைப் பற்றி என்ன ஸந்தேகம்" என்றார். மருத்தன் அவர் சொன்னபடி செய்தான்., கங்காதரரை நமஸ்கரித்து உத்தமமான தனத்தை அடைந்தான். மகாதேவருடைய அருளால் அந்தத் தனத்தை யடைந்து குபேரன் போலானான்.

## பாண்டவர் சிவஸ்துதி செய்து பொருள் பெற்றது.

### ஆஸ்வமேதிக பர்வம் 63, 64, 65வது அத்தியாயங்களின் திரட்டு.

பீமஸேனன் யுதிஷ்டிரரை நோக்கி மஹாராஜரே! நாம் பரமசிவனைப் பூஜித்து அதை (தனத்தைக்) கொண்டு வருவோம். உமக்கு க்ஷேமம் உண்டாகுக. விபுவும் தேவதேவர்களுக்கும் ஈசரும் சூலத்தைக் கையிற் கொண்டவரும் மூன்று கண்களுள்ளவரும் ஆதியும் அந்தமுமற்றவரும் மஹேஸ்வரருமான அந்தச் சம்புவை நமஸ்கரிப்போம். உலகங்களுக்கு நாதரும் கணங்களுக்கு அதிபதியுமான அவரையும் அவருடைய அந்தப் பரிவாரங்களையும் வாக்கினாலும் மனத்தினாலும் செய்கையினாலும் அருள்புரியும்படி செய்து நிச்சயமாகத் தனத்தை அடைவோம். விருஷபத்வஜர் கிருபை செய்தால் அந்தத் திரவியத்தை ரக்ஷிப்பவர்களும் பார்க்கப் பயங்கரர்களுமான கின்னரர்களும் வசப்படுவார்கள். பிரபுவான அந்தப்பரமேஸ்வரர் கிருபை செய்தால் பக்தர்களுக்கு அமரத்தன்மையையும் கொடுப்பார். ஸுவர்ணத்தைக் கொடுப்பதில் என்ன சந்தேகம்? முற்காலத்தில் அர்ஜுனனுக்குப் பிரஸன்னராகிப் பாசுபதமென்னும் சிறந்த அஸ்திரத்தையும் பயங்கரமான பிரம்மசிரஸ் என்னும் அஸ்திரத்தையுங்கொடுத்தார். தனத்தைப்பற்றிச்சொல்ல வேண்டுமா? கௌரவநந்தனரே! நாமெல்லாரும் அவருடைய பக்தர்கள். அவரும்

நம்மிடத்தில் கிருபையுள்ளவர். அவருடைய அனுக்கிரஹத்தால் இந்த ராஜ்யம் அடையப்பட்டது. தனஞ்சயன் கேசவருடன் சேர்ந்து பரமசிவனை அருள்புரியச் செய்து அஸ்திரத்தை அடைந்தான். பரமசிவன் பல்குனனுக் கெதிரில் பிரத்தியக்ஷமாகிச் சூலத்தினால் (பகைவரின்) சேனையைக் கொன்றார். மஹாராஜரே! துரோணர் கர்ணன் (முதலான) பலிஷ்டர்களுடன் கூடின அந்தச் சேனையை மஹேஸ்வரரைத் தவிர (வேறு) எவன் மனத்தாலாவது ஆக்ரமிப்பான்? அவருடைய அனுக்ரகத்தினாலேயே உம்முடைய பகைவர்கள் கொல்லப்பட்டார்கள். அவரே உம்முடைய அஸ்வமேதத்தை நிறைவேறச் செய்யப் போகிறார்' என்று சொன்னான். அந்தப் பீமனுடைய வாக்கியத்தைக் கேட்டு யுதிஷ்டிரர் மிக்க சந்தோஷமுள்ளவரானார். அர்ஜுனன் முதலானவர்களும் 'அப்படியே' என்னும் வார்த்தையைச் சொன்னார்கள். பாண்டவர்களெல்லாரும் ரத்னங்களைக் கொண்டுவர நிச்சயித்து மஹேஸ்வரரைப் பூஜித்துப் பிரார்த்தித்துச் சென்றார்கள். (எல்லாரும்இமய)மலைக்குச் சென்றார். ராஜசிரேஷ்டர்கள் உபவாசமிருந்து இரவில் குசசயனங்களில் வசித்தார்கள். பிராமணர்கள், 'அரசரே! மகாத்மாவான முக்கண்ணருக்கு இப்பொழுது பலியைச் செய்யும்' என்று சொன்னார்கள். யுதிஷ்டிரர் பரமசிவனுக்கு விதிப்படி பலியை ஸித்தஞ் செய்தார். தூபத்தினுடைய கந்தத்தால் வியாபிக்கப்பட்டதும் புஷ்பங்களால் மூடப்பட்டதுமான தேவதேவரான சங்கருடைய ஸ்தானமானது மிகவும் விளங்கிற்று. அரசர், (இவ்விதம்) ருத்ரருக்கும் (அவருடைய) எல்லாக் கணங்களுக்கும் பூஜையைச் செய்து வியாஸரை முன்னிட்டுக் கொண்டு ரத்னமிருக்குமிடத்திற்குச் சென்றார். பாண்டவர் அந்தத் திரவியத்தை எடுத்துக்கொண்டு மறுபடியும் மஹாதேவரைப் பூஜித்து வியாஸரால் அநுமதி கொடுக்கப்பட்டுப் புரோகிதரை முன்னிட்டுக்கொண்டு ஹஸ்தினபுரத்தைக் குறித்துச் சென்றார். அந்தப் பெரிய சேனையானது திரவியத்தின் பாரத்தால் பீடிக்கப்பட்டுக் கஷ்டத்துடன் சுமந்துகொண்டு பட்டணத்தை நோக்கிச் சென்றது.

---

வண்டுளருந் தண்டுழாய் மாயோ னிறுமாப்பும்
புண்டரிகப் போதுறையும் புத்தே ளிறுமாப்பு
மண்டர்தொழ வாழுன் னிறுமாப்பு மாலால
முண்டவனைப் பூசித்த பேறென் றுணர்ந்திலையால்

—திருவிளையாடற் புராணம்.

---

உ

# தெய்வ மூர்த்த தத்துவார்த்தம்.

(காஞ்சிபுரம் திரு. வை. ச. இராமலிங்க முதலியாரவர்கள்)

(சிவநேசன் ஆண்டு-8-46-ம் பக்கத்தொடர்ச்சி)

## நடராஜ மூர்த்தம்.

சிவாகம விதிமுறைப்படி யமைக்கப்பெற்றிலகுஞ் சிவாலயங்கடோறும், மகாமண்டபத்தின்கண், திவ்வியமான நடராஜ மூர்த்தங் காணப்பெறுகின்றது. இம்மூர்த்தத்தின் வடிவத்தை மிக நுணுகி யறியுமிடத்து, அநேக தத்துவார்த்தங்களும், அதிசூக்கும வுண்மைப் பொருள்களும் தெளிவாக விளங்குகின்றன.

நடராஜன் என்றால் நடன சபைக்குத் தலைவன். சபாநாயகர் என்பது மிதுவே. சபாபதி எனினுமமையும். இவ்வுலகமே யொரு நாடக வரங்காகவும், அதிற்றோன்றி வசிக்கும் சராசர வுயிர்த் தோற்றங்களாகிய, பலஜீவராசிகளே நடிகர்களாகவும், "அவனன்றி யோரணுவு மசையாது" என்னு மான்றோ ரமுதமொழிக் கேற்ப, அவ்வசராசரங்கள் யாவையுமாட்டி இயக்குவிக்கும் மூலகாரணனாகவும் இறைவன் விளங்குகின்றான். "ஆட்டுவித்தா லாரொருவ ராடாதாரே" என்னும் நம் நாவுக்கரசின் நன்மொழிக் கிணங்க நம்மையெல்லாமாட்டுவிக்கும் பொருட்டு அம்பலத்தாடும் பரமாத்மாவுக்கே நடராஜன் என்று பெயர். இவர் தம்மை யடைந்த, சுத்தாத்மாக்களை யுய்விக்கும் பொருட்டுச் செய்தருளிய திருநடனங்கள் பல. இவைகளின் விரிவை சைவநூல்களிற் கண்டுணர்க. "என்னத் தனுடல் கண்டின்புற்றதா லிவ்விரு நிலமே" என்ற தமிழ்மறைக் கிணங்க, இம்மூர்த்தியின் திருநடனக் காட்சி வைபவத்தைக் கண்கொண்டு தெரிசித்தார்க்கு மோட்சவின்ப வெளியில் சித்திக்குமென்பது நூல்களின் றுணிபு.

"ஊனடைந்த வுடம்பின் பிறவியே
தானடைந்த வுறுதியைச் சாருமால்
தேனடைந்த மலர்ப்பொழிற் றில்லையுள்
மாநடஞ்செய் வரதர்பொற் றாடொழ".

என்னும் பாசுரம் இதனை நன்கு வலியுறுத்தும். இம்மூர்த்தத்தைப் பஞ்சகிருத்திய மூர்த்தம் என்றும், அவர் செய்யும் நடனத்தை பஞ்சகிருத்திய தாண்டவம், என்றும் ஆன்றோர் கூறுவர். எவ்வாறெனில்:— (1) அவர் கையிலிருக்கும் உடுக்கை சிருட்டியையும், (2) அணைத்தகரம் திதியையும், (3) மழுவாகிய அக்கினி சங்கா

ரத்தையும், (4) ஊன்றிய பாதம் திரோபவத்தையும் (5) தூக்கிய திருவடி (குஞ்சித பாதம்) அனுக்கிரகமாகிய மோட்சத்தையுங் குறிக்கின்றன. இதனை,

"தோற்றந் துடியதனிற் றோயுந்திதி யமைப்பில்
சாற்றியிடு மங்கியிலே சங்காரம்—ஊற்றமாய்
ஊன்று மலர்ப்பதத்தே யுற்றதிரோ தம்முத்தி
நான்ற மலர்ப்பதத்தே நாடு"

என்ற பாசுரதால் நன்குய்த்துணர்க. இதனா லிம்மூர்த்தம் பஞ்சகிருத்திய மூர்த்தம் என்பது நன்கு விளங்கக் கிடக்கின்றது.

இந் நடராஜ மூர்த்தியின் சொரூபம், அவரது உண்மை நிலையையே காட்டுகின்றது. அவர் கங்கையையும், சந்திரனையும் தனது வெள்ளிய சடையினிடமாகத் தரித்திருக்குந் தோற்றமானது, இப் பிர்மாண்ட சொரூபமே இவர் தேக மென்பதையும், அண்ட முகடே யவர் சிரம் என்பதையும், "மின்னிய மின்னலின் பிறக்கம் நின்சடையே" என்னும் பட்டினத்தடிகளின் திருவாக்குப்படி மின்னற் கூட்டங்களே யவர் சடைகளென்பதையும், அண்டமுகட்டில் விளங்குந் தேவகங்கையுஞ் சந்திரனும், அவர் சடையிற் சூடிய கங்காதேவியும் மூன்றாம் பிறைச் சந்திரனுமாகு மென்பதையும் குறிக்கின்றன. சர்ப்பாபரணமாகிய நாகங் குண்டலி சத்தியை யுணர்த்துகின்றது. இவ்வுலகமே யவர்தேகம்; வீசுங்காற்றே யவர் சுவாசம்; பாதாளமே யவர்திருவடிக ளென்பதையும், தேக முழுவதும் பூசிவிளங்குகின்ற விபூதி தூளனம், அவர் தத்துவ சொரூபமான "ஞான ரூபி" என்பதையுங் குறிக்கின்றன. அவர் கையிற்றரித்திருக்கும் முத்தலைச்சூலம் பிரமா விஷ்ணு ருத்திரன் என்னும் மும்மூர்த்திகளும் தாமே யென்பதைக் குறிப்பிக்கின்றது. இதனாலிவர் சமயாதீதக் கடவுள் என்பது புலனாகின்றது. இவர் நடிக்குமிடம் பொன்னம்பலம் என்றும், சிதாகாயம் என்றும், சிதம்பரம் என்றும் சுடலை என்றுங் கூறப்படுகின்றது. அம்பரம் என்றால் ஆகாயம் - வெறும் வெளி, பொது மன்றம் என்று பெயர். (சித் - அம்பரம்) சிதம்பரம், சித்தாகிய வெளி, அதாவது இருதய கமலஸ்தானம் என்பது பொருள். இந்தத் தூயவுள்ளமே ஞான மன்றமெனப்படும். "ஆனந்தத் தேனிருந்த பொந்து" என்று மணிவாசகப் பெருமானால் சிறப்பித்துக் கூறப்பட்ட இந்த ஞான மன்றமே, ஓங்கார மென்னும் திருச்சிற்றம்பலமாம். அதனுள் நடிப்பவனே நடராஜனாம். அதுபற்றியே "ஓங்காரத்துட் பொருளை" என்றும், "உய்யவென் னுள்ளத்து ளோங்காரமாய் நின்ற மெய்யா" என்றும் ஆன்றோர் கூறுவாராயினர். ஓங்காரமே இவ்வுலக வடிவு. இவ்வுலகமே நிருத்த மணிமன்றாக, நடராஜன் சகல சராசரப்



பொருள்களையு மியக்கி, பஞ்சகிருத்தியம் நடத்துவான் வேண்டி, அனவரதமும் ஆனந்தநிருத்தஞ் செய்கின்றனர். இவ்வுண்மையைப் புலப்படுத்தவே, மற்ற விக்கிரஹங்களைப் போலாது, நடராஜ மூர்த்தத்திற்குத் திருவாசி யென்னும் பிரபையானது, அதனிடமிருந்து பிரிக்கவொட்டாமல் சேர்த்து அமைத்திருத்தல் காண்க.

இம்மூர்த்தி ஒரு திருக் கரத்தில் உடுக்கை யேந்தி "ஓம்" என்னும் பிரணவ சப்தத்தினால் இவ்வுலகைத் தோற்றுவித்தும், ஒரு திருக்கரத்தை யமைத்து ஞானிகளுக்கு மோன நிலையையும், ஒரு திருக்கரத்தை யணைத்து ஆன்மாக்களுக்குப் போக போக்கியங்களையும், ஒரு திருக்கரத்தில் அனலேந்தி ஆன்மாக்களின் பந்தங்களை யகற்றியும், ஒரு திருக்கரத்தில் மானைக் காட்டி மானைப் போலத் தாவும் மனமுடையவர்கள் தன்னையறியப் படாமையையும், புலியத ளணிந்து அகங்காரத்தைப் போக்குந்திறனையும் முயலகனை மிதித்து ஊன்றியதிருவடியால் பிறப்பிறப்பையொழித்தும், ஆடவெடுத்திட்ட திருவடியால் சாக்கிர, சொப்பன, சுழுத்தியாகிய மூன்றவத்தையுங் கடந்த துரிய நிலையாகிய முத்தியையும் அருளுகின்றார் என்பதே இம்மூர்த்தத்தின் தத்துவார்த்தங்களாகும்.

இம்மூர்த்தியின் திருவடிப் பெருமையினையும் ஆடலின் பெருமையினையும்,

"மாயை தனையுதறி வல்வினையைச் சுட்டுமலஞ்
சாய வமுக்கியருள் தானெடுத்து—நேயத்தால்
ஆனந்த வாரிதியி லான்மாவைத் தானழுத்தல்
தானெந்தை யார்பாதந் தான்"

"முத்தி - நான்ற மலர்ப்பதத்தே நாடு"

"......................—ஆங்காரம்
அற்றாரறிவாணி யம்பலத்தா னாடலிது
பெற்றார் பிறப்பற்றார் பின்"

என்று போதரும் ஆன்றோர் வாக்குக்களால் உள்ளங்கை நெல்லிக்கனியே போல், தெள்ளிதினுய்த்துணர்க. இம்மூர்த்தத்தை அறிவுடைப் பெருமக்கள் "பஞ்சாக்கரவடிவம்" என்றும் கூறுகின்றனர். இதனை,

"மருவுந் துடியுடன் மன்னிய வீச்சு
மருவிய வம்பு மனலுடன் கையுங்
கருவின மிதித்த கமலப் பதமும்
உருவில் சிவாய நமவென வோதே"

என்ற திருமூலயோகிகளது வாக்கு நன்கு வலியுறுத்துகின்றது. தில்லைச் சிற்றம்பலத்தின்கண் ஆநந்ததாண்டவத் திருநடங் குயிற்றும் பரமகருணாநிதியாகிய நடராஜமூர்த்தியை தூலபஞ்சாக்கரவடிவ முறையிற்கொள்ளுங்கால், திருவடியிலே "நகாரமும்" திருவுந்தியிலே "மகாரமும்" திருத்தோளிலே "சிகாரமும்", திருமுகத்திலே "வகாரமும்" திருமுடியிலே "யகாரமுமாக"ப் பாவனை கற்பித்துக் கூறுவரான்றோர். இதனை,

"ஆடும் படிகேணல் லம்பலத்தா னையனே
நாடுந் திருவடியி லேநகரம்—கூடு
மகர முதரம் வளர்தோள் சிகரம்
பகரு முகம் வாமுடிய பார்"

என்னும் உண்மை விளக்கச் செய்யுளானுணர்க. இவ்விறையவனைச் சூக்கும பஞ்சாக்கர வடிவினனாகக் கொள்ளுமிடத்துத் தமருகந்தாங்கியதிருக்கரத்திலே "சிகாரமும்" வீசுந்திருக்கரத்திலே "வகாரமும்" அபயத் திருக்கரத்திலே "யகாரமும்" அக்கினியேந்துந் திருக்கரத்திலே "நகாரமும்" முயலகனை யூன்றிய திருப்பாதத்திலே "மகாரமுகமாக" பெரியோர்கள் பாவனை கற்பித்துக் கூறுவர். இதனை,

"சேர்க்குந் துடிசிகரம் சிக்கனவா வீசுகரம்
ஆர்க்கும் யகர மபயகரம்——பார்க்கிலிறைக்
கங்கிநகர மடிக்கீழ் முயல கனார்
தங்கு மகரமது தான்"

என்னு மான்றோர் வாக்கால் நன்குய்த்துணர்க. உண்மைநிலையுணர்ந்த மெய்ஞ்ஞானிகள் இவரைப் பல்வேறுவிதமாகவும் உருவகப் படுத்தி பலஞானார்த்தங்களையுங் கற்பித்துக் கூறுவர். இம்மூர்த்தின் பெருமையோ அளவுகடந்தது.

இத்தகைய மேன்மையுடன் விளங்கும் நடராஜ மூர்த்தியின் ஆனந்தத் தாண்டவ திருநடனத்தை உள்ளமாகிய தகர புண்டரீகமென்னு மிருதயஸ்தான சிதாகாச வெளியில் ஞானக்கண்கொண்டு, கண்டு அழிவில் இன்பமுத்தியடைய முயல்வோமாக!

"சிந்தை தெளியத் தெளியவல் லார்கட்குச்
சிந்தை யினுள்ளே சிவனிருந்தானே" (திருமந்திரம்)

—

உ

# இந்தியாவின் தற்கால அரசியல்.

(கண்டாச்சிபுரம் திரு. வை. ச. இராமலிங்க முதலியாரவர்கள்)

ஆர்கலி சூழ்ந்திலகு மிப் புவியில், மிக்க புராதனமாய், விசேஷ நாகரீகத்திலும், உயர்ந்த கல்வியிலும், அரிய கைத்தொழிலிலும், மிகுந்த வர்த்தகத்திலும் சிறந்து விளங்குவது நம் இந்திய தேசமேயாகும். இவ் விந்தியாவை ஆங்கிலதேசத்தவர்கள் கைக்கொண்டு, அரசாட்சி செய்யும்படியாய் நேர்ந்தது தெய்வீகமென்றே நம்புவதற்கு அநேக காரணங்களுள்ளன. இது நம் நாட்டினர்க்கோர் அதிர்ஷ்டமென்றே சொல்லலாம். நமது நாட்டின் பிரபல தலைவர்கள், சுதேசு மன்னர்கள், சிற்றரசர்கள் முதலியவர்களின் ஒற்றுமைக் குறைவாலும், பொறாமை, கட்சிப்பிளவு, வஞ்சகம், சூது முதலிய கொடுஞ் செயல்களாலும், நமது இந்தியதேசமானது கொஞ்சங் கொஞ்சமாக ஆங்கிலேயரின் ஆட்சியின்கீழ் வந்து சேர்ந்தது. தளராமுயற்சி, ஊக்கம், கல்வியறிவு, செல்வீகம், பராக்கிரமம், விஸ்வாசம், ஒற்றுமை, இராஜ தந்திரம் முதலிய சிறந்த குணங்கள் நிரம்பப்பெற்றிருந்த தன்மையால் ஆங்கிலேயர்கள் இந்தியாவை ஆட்சிபுரியும் பெரும்பேறெய்தினர். நமது பெரிய இந்திய தேசத்தை இவ்வளவு சௌகரியமாகவும், சுலபமாகவும், எப்படியவர்கள் ஆட்சி செய்கிறார்கள்? அவ்வாளுகை எத்தகைத்து? அதன் பெருமை எப்படிப்பட்டது? சிறிய கிராமங்கள் முதல், அவ்வரசாட்சியின்கீழ் அமைந்திருக்கும் விதமெப்படி? நமது தேசத்து நன்மையையும், சமாதானத்தையும் எப்படி விருத்தி செய்கிறார்கள்? என்னும் விஷயங்களைப்பற்றி, நாம் ஆராய்ந்தறிதல் மிகவும் அவசியமான காரியமாகும். அப்படிச் செய்வதால் நம்முடைய ராஜ விஸ்வாசம் விருத்தியடையு மென்பதற் கையமில்லை.

## ஆங்கிலேயரின் மேலதிகாரம்.

நமது இந்திய சாம்ராச்சியமானது இங்லண்ட் அரசரது (George v) அதிகாரத்துக்கு உட்பட்டிருக்கிறது. அவரே அதற்குப் பிரதானமான அதிகாரி. அவரே இந்தியாவிற்குச் சக்கிரவர்த்தி. பிரபுக்கள் மன்றம் (House of Lords), குடிகள் மன்றம் (House of Commons), என இரு கூறுக ளடங்கிய பார்லிமெண்ட் (Parliament), என்னும் சபையின் உதவியைக்கொண்டும், அவற்றின் பிரதிநிதிகளடங்கிய காபினெட் (Cabinet) என்னும்

மந்திராலோசனை சபையின் உதவியைக்கொண்டும், அவர் லண்டனிலிருந்து இந்தியாவை ஆள்கிறார். அச்சபைகள் தமது சொந்த ராஜ்யத்தின்கீழ் அடங்கிய நாடுகளெல்லாவற்றிலும், இராஜீய விஷயங்களில் தலைமையதிகாரஞ் செலுத்துவது போலவே, இந்திய இராஜீய விஷயங்களிலும், தலைமையதிகாரத்தை வகிக்கின்றன. பிரிட்டிஷ் மன்னரது மந்திராலோசனை சபையின் தலைவர், பிரதம மந்திரி (Prime Minister) எனப்படுவார். இச்சபையில் இந்திய விஷயங்களைப் பிரத்தியேகமாய்க் கவனித்துவரும் மந்திரி, (இந்திய அரசாங்கக் காரியதரிசி அல்லது இந்தியா மந்திரி) Secretary of State for India, எனப்படுவார். இவரே இச்சபையின் சார்பாகவும், சக்கரவர்த்தி சார்பாகவும், உண்மையில் இந்தியாவை ஆள்பவர். இந்தியாவிலுள்ள உத்தியோகஸ்தருள் வைசிராய் முதல் அனைவரும் அவரது உத்திரவை மேற்கொண்டு நடக்கவேண்டும். அவரை நியமிக்கவும், நீக்கவும் அதிகாரமுடைய பிரிட்டிஷ் பிரதம மந்திரிக்கு அவர் உத்திரவாதம் சொல்லவேண்டும். தவிர அவர் ஒவ்வொருவருஷமும் இந்திய வரவு செலவு திட்டத்தையும், இந்தியாவின் பலபாகங்களும் அடைந்த அபிவிருத்தியைப்பற்றிய அறிக்கையையும் பார்லிமெண்டுக்குச் சமர்பிக்கவேண்டும். அவருக்கு ஆலோசனை கூறி உதவிபுரிவதற்காக லண்டனிலேயே இந்தியா சபை (India Council) யொன்றுள்ளது. யுத்த சம்பந்தமான விஷயங்களில் இந்திய அரசாங்கக் காரியதரிசி அச்சபையின் அனுமதிபெற்றே நடக்கவேண்டும். மற்ற விஷயங்களில் அதன் ஆலோசனையைக் கேட்காமலும், அதன் தீர்மானத்துக்குக் கட்டுப்படாமலுங்கூட அவர் நடக்கலாம். அதில் பன்னிருவருக்கு மேற்படாது எண்மருக்குக் குறையாத அங்கத்தினர்கள் உளர். அவர்களுள் பாதிப்பேர் பத்து வருஷங்களுக்குக் குறையாது இந்தியாவில் வாழ்ந்து அநுபவம் பெற்றவர்களாயும், உத்தியோக மேற்குஞ் சமயத்தில் ஐந்து வருஷங்களுக்கு முன்னமே இந்தியாவினின்றும் விலகாதவர்களாகவும் இருக்கவேண்டும். தற்போது மூன்று இந்தியர்கள் அதில் அங்கத்தினர்களாக உளர்.

இந்தியா மந்திரிக்கும் இச்சபையினர்க்கும் முதலில் இந்திய வரும்படியிலிருந்து சம்பளம் அளித்துவரப்பட்டதாயினும், 1919 முதல் அவர்களனைவரும் பிரிட்டிஷ் பொக்கிஷத்திலிருந்தே சம்பளம் பெற்று வருகின்றனர். இந்தியா மந்திரியும், அவரது சபையும், அவர்கள் சிப்பந்திகளும் வேலை செய்யுமிடம் "இந்தியா ஆபீஸ்" (India office) எனவழங்கும். இவர்களேயன்றி "இந்திய ஹைகமிஷனர்" (High Commissioner for India) என்னும் உத்தியோகஸ்தரொருவரும் 1919-இல் ஏற்பட்டசட்டப்படி நியமிக்கப்பட்டுள்ளார். கடன் வாங்கல், வியாபார ஒப்பந்தங்களேற்படுத்தல்,



உபகாரச் சம்பளம் அளிப்பதை மேற்பார்வையிடல், வெளிநாடுகளிலுள்ள இந்திய மாணவரது சௌகரியங்களைக் கவனித்தல் முதலியவைகள், அவரது வேலையாகும். அவரது சம்பளமும் அவர் காரியாலயத்தின் நிர்வாகச்செலவுகளும் இந்திய பொக்கிஷத்தினின்றும் அளிக்கப்படுகின்றன.

## இந்திய சாம்ராஜ்ய துரைத்தனம்.
## (The Imperial Government of India)

இவ்விதம், சக்கரவர்த்தி, பார்லிமெண்டு சபையார், பிரிட்டிஷ் காபினெட், இந்தியா அரசாங்கக் காரியதரிசி, இந்தியா சபையினர், ஹைகமிஷனர் ஆகியோர் சேர்ந்து நடத்தும் துரைத்தனம் ஆயிரக்கணக்கான மைல்களுக்கப்பாலிருந்து நடைபெறுகின்றது. இந்தியாவுக்குள்ளேயே டில்லியிலிருந்து இந்தியாவைப் பரிபாலிப்பது வைஸ்ராயின் துரைத்தனம். அவர் சக்கரவர்த்தியின் சார்பாக இந்தியாவை ஆள்வதால் அவர் இராஜப்பிரதிநிதி (Viceroy) எனப்படுகிறார். இந்தியாவிலுள்ள கவர்னர்களுக்கெல்லாம் அவர் மேலதிகாரியாயிருத்தலால் அவருக்குக் கவர்னர் ஜெனரல் (Governor General) என்னும் பெயரும் வழங்கப்படுகின்றது. இந்தியா முழுமைக்கும் பொதுவான இராஜீய விஷயங்களையெல்லாம் கண்காணிப்பதே அவர் வேலை. இந்தியாவிலுள்ள உத்தியோகஸ்தர்களெல்லாம் அவருக்குக் கீழ்ப்படியவேண்டும். சுதேச அரசாங்கங்கள் விஷயத்திலும் அவருக்குப் பூரண அதிகாரமுண்டு. சாதாரணமாக அவர் ஐந்து வருடங்களுக்கு நியமிக்கப்படுகிறார். சில சமயங்களில் அக் கால அளவு அதிகமாக்கவும்படும். அவர் பிரிட்டிஷ் பிரதம மந்திரியின் சிபார்சுப்படி நியமிக்கப்படுகிறாராயினும், இந்தியா மந்திரியின் சொற்படியே அவர் நடக்கவேண்டும்.

இராச்சிய பரிபாலனத்தில் அவரது நிருவாகசபை அவருக்கு உதவியாயுள்ளது. அதன் அங்கத்தினர்களிலொருவர் "உள்நாட்டுத் துரைத்தன விஷயங்களையும்"; ஒருவர், வரிவசூல், விவசாயம், முதலியவற்றையும்; ஒருவர் வியாபாரம், தொழில், தந்தி, தபால், இருப்புப்பாதை, ஆகியவற்றையும்; ஒருவர் சட்டங்களை ஏற்படுத்தல், அவைகளைத் திருத்தல், சட்டசபைகளை மேற்பார்வையிடல், ஆகியவற்றையும்; ஒருவர், சேனாதிபதி ராணுவத்தையும், ஒருவர் கல்வியபிவிர்த்தியையும், ஒருவர் பொக்ஷத்தையும் கவனிப்பர். வெளிநாட்டுச் சம்பந்தங்களையும், சுதேச சமஸ்தான விஷயங்களையும், வைஸ்ராயே (Viceroy) கவனிப்பார். முக்கிய விஷயங்கள் தவிர மற்றவற்றில் அங்கத்தினர் அபிப்பிராயப்படியே நடப்பர். வைஸ்ராயும் இச்சபையின் தீர்மானத்தாற் கட்டுப்பட்டவரல்லர். இதில் மூன்று இந்திய அங்கத்தினர் உளர். வைஸ்ராயும் அவரது நிரு

வாகசபையும் சேர்த்துச் "சபையோடு கலந்த கவர்னர் ஜெனரல்" (The Governor General in Council) என வழங்குவதுண்டு.

இந்தியா முழுமைக்கும் பொதுவான சட்டங்களை ஏற்படுத்த இரண்டு சபைகளுள்ளன. அவைகளுள் அறுபது அங்கத்தினர்களடங்கிய "அரசாங்கசபை" (The Council of State) மேற்சபை. அதின் அங்கத்தினர்களில் அரசாங்க உத்தியோகஸ்தர் தொகை இருபதுக்கு மேற்படாது. இந்தியா சட்டநிரூபண சபை (The Legislative Assembly) என்பது கீழ்ச்சபை. அதன் மொத்த அங்கத்தினர்கள் 144. இதில் எழில் ஐந்துபேர் ஜனங்களால் தேர்ந்தெடுக்கப்படுவார்கள். இவை டில்லியில் கூடும். இவ்விரண்டு சபைகளையும் கூட்டும் அதிகாரம் வைஸ்ராய் (Viceroy) க்குண்டு. அவைகளால் கொண்டுவரப்படும் மசோதாக்கள் (Biles) அவர் அநுமதியின்றிச் சட்டமாகா. மேலும் அத்தகைய மசோதாக்களை மாற்றவோ, தடைப்படுத்திவைக்கவோ, அடியோடு நிறுத்தி விடவோ மட்டுமன்றி; நாட்டுக்கு நன்மை பயக்கும் என்பதாகத் தோன்றும் சட்டங்களைச் சட்டசபையினது மறுப்பை அசட்டை செய்து அமுலுக்குக் கொண்டுவரவும், கடைசியாக அவ்விரண்டையுங் கலைத்துவிடவுங்கூட அவருக்கு அதிகாரமுண்டு. வரவு செலவு திட்டத்தில் சில விஷயங்களில் மட்டும், அவர் அச்சபையின் அனுமதியின்றியும், அவற்றின் அபிப்பிராயத்தை மீறியும், ஏற்பாடுகள் செய்யலாம். மற்றவிஷயங்கள் சபையின் அபிப்பிராயப்படியே நடைபெறும். வைஸ்ராய், அவரது நிருவாகசபை, இவ்விரண்டு சட்டசபை; ஆகியவைகளுடன் சேர்ந்து நடத்துவதே, இந்தியாவுக்குள்ளேயே நடக்கும், சாம்ராச்சிய துரைத்தனமாகும்.

## மாகாண துரைத்தனம்.
## Provincial Government.

இந்தியா முழுமைக்கும் பொதுவான காரியங்களைச் சாம்ராச்சிய துரைத்தனத்தார் நடத்துகின்றனர். தவிர, ஒவ்வொரு மாகாணத்திற்கும் தனித்தனி துரைத்தனங்களிருக்கின்றன. கவர்னரும், அவரது நிருவாக சபையும், மாகாண சட்டசபையும் சேர்ந்ததே மாகாண துரைத்தனம் எனப்படும். ஒவ்வொரு மாகாணத்திற்கும் அதிபதியாயிருப்பவர் அதன் கவர்னர். பஞ்சாப், மத்தியமாகாணங்கள், பீஹார், ஒரிஸா, பர்மா ஆகிய நான்கு சிறுமாகாணங்கட்கும் அதிபதியாயிருப்பவர்கள் லெப்டினென்ட் கவர்னர்கள். (Lieutenant Governors) எனப்படுவர். கவர்னர் ஐந்து வருஷங்களுக்கொருவராக நியமிக்கப்படுகிறார்கள். சென்னை, பம்பாய், கல்கத்தா, இம்மூன்றின் கவர்னர்கள் மட்டும், சக்கரவர்த்தியாலே



நேராக நியமிக்கப்படுகின்றனர். ஏனையவற்றின் கவர்னர்கள், கவர்னர் ஜெனரலின் சிபார்சைக்கொண்டு நியமிக்கப்படுகின்றனர். கவர்னர்கள், வைஸ்ராயின் உத்திரவுப்படி நடக்கவேண்டியதுடன் அவருக்கு உத்திரவாதம் சொல்லவும்வேண்டும். சென்னை, பம்பாய், கல்கத்தா இவற்றின் கவர்னர்களுக்கு மட்டும் நேராக இந்தியா மந்திரியோடு சம்பந்தம் வைத்துக்கொள்ளவும், கவர்னர் ஜெனரல் மீதுள்ள குற்றத்துக்காக இந்தியமந்திரியிடம் முறையிடவும் உரிமையுண்டு.

மாகாணநிருவாக சபையை இருகூறுகளாகப் பிரிக்கலாம். கவர்னரோடு அவருக் குதவியாயிருக்கும் காரிய நிர்வாக அங்கத்தினர் (Members of the Executive council) ஓரம்சம். மாகாணத்து மந்திரிகள் (Ministers) மற்றோரம்சம். மேற்சொன்ன அங்கத்தினர்கள் துரைத்தனசேவையிலே நெடுநாளிருந்து உயர்ந்தவர்கள். வரி வசூல், நீர்பாய்ச்சல், வரவுசெலவு கணக்குகள், நியாய விசாரணை, உள்ளூர்ப் பாதுகாப்புமுதலிய முக்கியமான விஷயங்களை அவர்கள் கவனிப்பார்கள். அத்தகையவற்றிற்கு ஒதுக்கி வைக்கப்பட்டவிஷயங்கள் (Reserved Subjects) என்று பெயர். மந்திரிகள் சட்டசபையின் அங்கத்தினர்களிலிருந்து, அவர்கள் குடிகளிடம் பெற்றுள்ள ஆதரவை யொட்டிக் கவர்னரால் நியமிக்கப்படுவார்கள். அவர்கள் சட்டசபைக்கு உத்தரவாதம் சொல்லவேண்டும். சட்டசபையைத் திருப்தி செய்யக்கூடிய வழியில், அவர்கள் நடந்துகொள்ளாவிடில், அதின் அங்கத்தினர்கள் அவர்கள் நடத்தையைக் கண்டித்து அவர்களைப் பதவியிலிருந்து விலக்கச் செய்யவும் கூடும். கவர்னருக்கும் அவர்களை நீக்கும் அதிகாரம் உண்டு. கல்வி, சுகாதாரம், கைத் தொழில் விருத்தி, கூட்டுறவு, உள்ளூர் சுயாட்சி, முதலிய மற்ற விஷயங்களை மந்திரிகள் கவனிப்பார்கள். அவர்க்கு மாற்றப்பட்ட விஷயங்கள் (Transferred Subjects) என்று பெயர். இவ்வாறு இருபிரிவுகளாக நடத்தப்படுவதால் இந்த ஆட்சி இரட்டையாட்சி (Diarchy) எனப்படும்.

மாகாணத்துக்கு அவசியமான சட்டங்களை ஏற்படுத்துவது மாகாணசட்டசபை. அதின் அங்கத்தினரில் நூற்றுக்கு 70 பேராவது ஜனங்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகளாயிருப்பார்கள். இந்தியசட்ட நிரூபண சபைக்கும் வைஸ்ராய்க்குமுள்ள சம்பந்தமே இச்சபைக்கும் கவர்னருக்கு மிடையே யுள்ளது. ஒதுக்கிவைக்கப்பட்ட விஷயங்களில் அதன் அதிகாரஞ் செல்லாது. அதன் மசோதாக்களை நாட்டு நன்மைக்கு விரோதமானவை யெனக் கூறித் தடுக்கும் அதிகாரம் கவர்னருக்குண்டு. மக்களது நன்மைக்கு அவசியமானவை யெனக் கவர்னரால் கொண்டுவரப்படும் மசோ

தாக்கலை அவர்களால் மறுக்கமுடியாது. அதன் மசோதா எதுவும் கவர்னர் அனுமதியையும், கவர்னர் ஜெனரலின் அனுமதியையும், பெற்றபின்னரே சட்டமாகும். கவர்னர் அவசியமெனத் தீர்மானிக்குஞ் செலவுகள் தவிர, மற்ற வகையில் வரவு செலவு திட்டத்தைப்பற்றி விவாதித்து அதில் மாறுதல்செய்ய அதற்கு அதிகாரம் உண்டு. இங்கிலாண்டில் நடைபெறும் "பிரிட்டிஷ் துரைத்தனம்" இந்தியாவுக்குள்ளேயே நடக்கும் "இந்தியா சாம்பிராச்சிய துரைத்தனம்" இந்தியாவின் பல பிரிவுகளாகிய மாகாணங்களில் நடைபெறும் "மாகாணத்துரைத் தனம்" ஆகிய மூன்றுமே தற்கால ஆட்சி முறையில் முதன்மை யானவைகளாகும். மாகாணத்துக்குட்பட்டநகரம், ஜில்லா, தாலுகா, முதலிய சிறுபிரிவுகளின் துரைத்தனம், நகரபரிபாலனசபை, ஜில்லாசபை, தாலுகாசபை (தற்காலம் எடுபட்டது), கிராம பஞ்சாயத்துசபை முதலியவற்றால் நடத்தப்படுகின்றது. இவற்றின் அங்கத்தினர் அனைவரும் சென்னை மாகாணத்திலேற்பட்டுள்ள புதிய சட்டப்படி குடிகளால் தேர்ந்தெடுக்கப் பெற்றவர்களாவர். இவையே சுய ஆட்சியின் அடிப்படையான ஸ்தாபனங்களாம்.

தவிர, தேச அமைதியுடன் பொதுவாய் அரசியலை நடத்தவும், வருவாய்களை ஒழுங்குப்படுத்தித் தேசத்தைச் சரிவரப் பரிபாலனம் பண்ணிவரவும் ஒவ்வொரு மாகாணங்களிலும் ஒரு ஹைகோர்ட்டு வைக்கப்பட்டிருக்கிறது. அதின்கீழ் ரெவினியூடிவிஷன் வாரி, பல நீதிவிசாரணை மன்றங்களும் ஏற்படுத்தப்பட்டிருக்கின்றன. மாகாணங்கள் பல ஜில்லாக்களாகவும், ஜில்லாக்கள் தாலுக்காக்களாகவும், டிவிஷன்களாகவும், தாலுக்காக்கள்பிர்க்காக்களாகவும் (Firka)பிரிக்கப்பட்டிருக்கின்றன. பல கிராமங்கள் சேர்ந்தது பிர்க்கா எனப்படும். மேற்கண்ட ரிவின்யூ டிவிஷன்கள், கலெக்டர், சப்கலெக்டர், டிப்டி கலெக்டர், தாசில்தார், டிப்டி தாசில்தார், ரிவின்யூ இன்ஸ்பெக்டர், மணியம், கர்ணம், தோட்டி, தலையாரி என்றபிரிவினையுடைய கவர்ன்மெண்ட் உத்தியோகஸ்தர்களால் பரிபாலிக்கப்படுகின்றன. தேச மகாஜனங்களின் பொதுப் பாது காப்பும் தேச அமைதியும் போலீஸ் டிபார்ட்மெண்டாரால் கவனிக்கப்படுகின்றது விரிக்கிற் பெருகும். இதுவே நமது ஆங்கில இந்திய அரசாட்சியின் அமைப்பு.

---

உ

# சோமசுந்தர விஜயம்.

(திருவல்லிக்கேணி வேதாகமோக்த சைவ சித்தாந்தசபை காரியதரிசி திரு. நல். கண்ணப்ப முதலியாரவர்கள்.)

சென்னை மாநகரின் கண்ணுள்ள சூளை என்னும் இடத்தில் வசித்துவந்த ஸ்ரீசோமசுந்தர நாயகரை உலகின் கண்ணுள்ள பலரும் அறிவார்கள். இவர் தமிழ்நூல்களை நன்குதேர்ந்த வித்துவசிரோன்மணியாயும், ஆரியமாகிய வடநூல்களில் உபநிடத வேதாந்தாதி ஆத்மபோத கிரந்தங்களான பிரபல சுருதிகளை ஆய்ந்தறிந்த மேதாவியாயும், "தாறுஅட்டித் தறுது நிறுப்பு" என்னும் புலவர் மதத்தினில் வழுவாத குணமுடையவராகியும், வேதசமாஜகண்டன முதல் மெய்கண்டார் தூஷணை மறுப்பு என்பதிறுதியாக ஐம்பதிற்கதிகமான பெரிதுஞ் சிறிதுமான புத்தகங்களை வேதாகமங்களிலுள்ள தகுந்த பிரமாணங்களுடன் வெளியிட்டும் பரமதவாதியர்கள் செய்த தூஷணங்களை நிராகரித்த பரம சிலாகனீயராயும், சைவ சமயிகளுள் குன்றிலிட்ட விளக்குப்போல குவலயமெங்கும் தன் பெயர் நிலைத்து நிற்குமாறு செய்து கொண்டவராயும், கல்வி மாத்திரத்தினாலே நூல்களை எழுதிப் பரப்பித் தாமொன்றிலும் பதிய நில்லாதாரைப் போலவல்லாது, சமயம் விசேஷம் முதலிய சைவ தீக்ஷைகளைத் தகுந்த சிவாசாரியார் வழித்தாகப் பெற்று, சிவபூஜை சிவத்தியானம் முதலிய நற் கருமங்களை யுடையவராயும், தமது வாலிபதசையில் தம்மாலேற்படுத்தப் பட்டுள்ள "வேதாகமோக்த சைவ சித்தாந்த சபை"யினை அநேகவிடங்களில் தாபனம் செய்தும் செய்வித்தும் பிரக்கியாதி பெற்றவராயும், அவைகள் அழியாதிருக்கத்தக்க தகுந்த ஊர்ச்சிதங்களை ஏற்படுத்தி யுள்ளவராயும், மாதுர்யமான வாக்தொனியினையும் சுத்தமான வசனநடையினையும் உடையவராயும் விளங்கினவர்.

மதம் பற்றி இவர்மாட்டுப்பகை யுடையவர்களிலும் கல்விவன்மையினை யுடையாரநேகர் இவரது அபூர்வ உபந்நியாசங்களைக் கேட்க விரும்புவ துடையராக இருந்தனர்.

சங்கராமானுஜ ஸோமநாதபண்டித நீலகண்டாதி பாஷ்ய ரகசியங்களை அறிந்தவர்களும் சதாதிகப்ரபந்தாதிபரான அப்பய தீக்ஷித கிரந்தங்களில் சைவாதிக்யம் பொருந்தின கிரந்தங்களின் அருத்தங்களை நன்குணர்ந்தவர்களும் இத் தமிழ் நாட்டில் இவரையன்றி வேறெவரையும் இன்னாரிருக்கின்றாரென்று எடுத்துரைக்க இடமில்லாதவராக இருந்தனர்.

பக்ஷபாதமின்றிப் பொதுவாக ஆராய்வாருக்குபயோகமான ஸத் கிரந்தங்களை இயற்றிய இப்பெரியவர் க்ஷத்திரிய வன்னிய குலத்திற் பிறந்து, இல்லற ஆசிரமத்தில் ஏகமனைவியோடு ஒழுக்கந்தவறாது ஐம்பத்தைந்து வயது வாழ்ந்தவர்.

சைவ சமயத்தை அபிமானித்த இவரது நண்பர்கள் உள்ளூரிலும் அநேகமாய் இருக்கின்றார்கள். இவர் தமதுவாணாள் முற்றும் சைவ சமய விருத்தியிலேயே கழித்து வந்தமையால் தமது குடும்ப க்ஷேமத்தை நோக்காமலிருந்து விட்டனர்.

பின்னர் இவர்சிலமாதமாக தேகபலம்குன்றிபிரசங்கதாருட்டியம் குறைந்திருந்ததெனினும் இவருக்கு எழுதும் வல்லபம் மாறாதிருந்தது. ஒருக்கால் தேக ஜாட்டியத்தினிமித்தம் எழுத்தைப் பார்ப்பதற்குக் கூடாமையாயிருந்த காலத்தும் "மெய்கண்ட சிவ தூஷண நிக்கிரக" மென்னும் நூலை தாம்சொல்லவேறொருவர் எழுதச்செய்து அச்சிட்டு வெளியிட்டனர்.

இத்தகையசிரத்தையும், வல்லபமுமுள்ள நமது ஸ்ரீலஸ்ரீநாயகர் அவர்கள் அக்கினி குலத்தவராயினும் மதத் துவேஷிகள் விஷயத்தில் சிறிது பேதம் பாராட்டினரல்லது பக்தி விஷயத்திலும், அடியார் விஷயத்திலும், ஜாதி விஷயத்திலும், சமயவிஷயத்திலும் சிறிதும் பேத மில்லாதவரா யிருந்தனர்.

இவர் 1846௵ (பிரபவ௵ ஆனி௴) அவதரித்து 16-வயதிற்குள் தமிழ், தெலுங்கு, சமஸ்கிருதம், இங்கிலீஷ் பாஷைகளில் நன்கு பயின்று சிவில் சர்விஸ் என்னும் பரீட்சையிற் றேர்ந்து, மொபிசல் போலீஸிலும் முனிஸிபாலிடியிலும் சில வருடகாலம் உத்தியோகஞ் செய்து வந்தனர்.

அக்கால் தமிழ், சமஸ்கிருத பாஷைகளில் அதி தீவிர முடையவராய் ஏனைய மத நூற்களையும், இலக்கண இலக்கிய தர்க்க சாஸ்திரங்களையும் வரம்புறப் பயின்று அவற்றுண் எவ்வகை அளவைகளானுஞ் சைவ சமயமே வேதாகமோக்த சத்சமயமெனத் தெளிந்து, தாம்உத்தியோகத்திலிருந்தவண்ணமே முதலிற் சென்னையிற் சிவபத்தியாதி லௌகீக வைதீக தரும சகிதமாய்ப் பிரசங்கஞ் செய்து வந்தனர். அப் பிரசங்க நோக்கம் தமது உத்தேசம்போல் நடத்துதற்குக்காலங்கூடாமையையும், க்ஷேத்திரவாசஞ்செய்தற்கு சாவகாசமின்மையையும் கருதி உத்தியோகத்தினின்றும் நீங்கி, கற்றோர் நட்பையும், ஆலய சேவையையும் விரும்பி பலக்ஷேத்திரங்களுக்குஞ் சென்று "சைவத்தின்மேற் சமயமில்லை" என்னும் சித்தாந்த பூர்வகமாகப் பிரசங்கமழை பொழிந்து, யாவருஞ் சைவத்துறையிற் படிந்துய்யச் செய்து வந்தனர். (எனவே இவர் பிரசங்கஞ் செய்ய ஆரம்பித்தது 16 வயதுக்கு மேலும், உத்தியோகத்திலமர்ந்தது 17, 18 வயதிற்கு மேலும், உத்தியோகத்தை விட்டது 21, 22 வயதிற்கு மேலுமாம்.)

இவர் தமது தேகசிரமத்தைப் பாராது எங்கணும் ஆனந்த மழை பெய்ததுபோலும் செய்துவந்த பிரசங்க விஷேடத்தையறிந்த மதுரை, திரிசிரபுரம், சேலம், நாகை, காஞ்சிபுரம், சிதம்பரம் முதலிய இடங்களிலுள்ள அன்பர்களின் வேண்டுகோளின்மீது ஆங்காங்கு சென்று உபந்நியாசித்தும், சைவ சித்தாந்த சபைகளை ஏற்படுத்தியும், பக்திஞானவைராக்கியங்களைஉண்டுபண்ணியும்வந்தனர்.



இவ்வாறு ஸ்ரீலஸ்ரீ, நாயகர் அவர்கள் நடத்தும் பிரசங்க விசேஷத்தையும், பக்தி சிரத்தைகளையும், கல்வியின் பிரபாவத்தையும் நோக்கிய திருவாவடுதுறை, தருமபுரம், மதுரை முதலிய விடங்களிலுள்ள மகுடாதிபதிகளும், ஜமீன்தாரர்களும் மற்றேனைய தனவான்களும் இவர் விஷயத்தில் அன்பும், மரியாதையும் காட்டிவந்தனர்.

இராமநாதபுரம் மகாராஜா ஸ்ரீமான் பாஸ்கர சேதுபதி அவர்கள் நமது ஸ்ரீலஸ்ரீ, நாயகர் அவர்களின் தீவிரதரத்தையும், மற்ற ஒழுக்க வழக்கமாகிய நன்னெறிகளையும் உணர்ந்து நேரில் வரவழைத்து சிங்கமுகத்தினையுடைய பொன் தோடா ஒன்று செய்து அதில் 'சைவசித்தாந்த சண்டமாருதம்' என்று எழுதி அதனை கும்பகோணம் ஜகத்குருபீடம் ஸ்ரீமத் சங்கராசாரிய சுவாமிகள் முன்னிலையில் பரிசளிக்கப் பெற்றனர். அன்றி மகாராஜா அவர்களின் நன்றியறிதலையும் நல்லுதவியையும் பெற்றனர்.

இவர் கடைசியாய் 1901௵ பிப்ரவரி௴ 22உ சுக்கிரவாரம் மாலை 5-மணிக்கு தமது ஆசாரியகுருக்களைத் தருவித்து தமக்கு வியோக காலத்தில் இன்னின்னபடி (சைவ நெறிபோல்) நடத்த வேண்டுமென்று சொல்லிவிட்டு அவரிடம் விபூதி பெற்றுக்கொண்டு தமது அருமைக் குமாரனை அழைத்து தேவார திருவாசகங்களை வாசிக்கச்செய்து திருவருளினை மறவாது பூரண உணர்ச்சியோடு பரிபூரண திசையை அடைந்தனர்.

இவரால் சென்னையில் 'வேதாகமோக்தசைவ சித்தாந்த சபை' ஸ்தாபிக்கப்பட்டு 70 வருடங்களாக நடைபெற்று வருகின்றது, இச்சபையைச் சேர்ந்த சிவ நேயர்கள் சைவ சமயத்திற்குப் பரமாசாரியார் போலவிருந்த இவர்களது பெயரால் யாதேனும் ஓர் ஞாபகச் சின்னம் செய்துவைப்பார்களென நம்புகின்றனம்.

எமது ஸ்ரீலஸ்ரீ நாயகரவர்கள் மீது இயற்றப்பட்ட நூல்கள் பலவற்றுள், சோமசுந்தரக்காஞ்சி, சோமசுந்தர பஞ்சகம், சோமசுந்தர அஷ்டகம், சோமசுந்தரமும்மணிக்கோவை, சோமசுந்தரதோத்திரசோடசம் முதலிய நூல்கள் முன்னரேயே வெளிவந்துள்ளன.

நலமுடைய சிவசமய குரவர் நால்வர்
நயக்கு மெய்மைச் சந்தானர் நன்குவாழி
வலமுடைய தேவாரமுதற் பனிரு முறையாம்
வண்மை யருட்பா வவைகள் வாழி வாழி
தலமுடைய வேதாக மோக்த சைவசித்தாந்த
சபையுறுத்த சோமசுந்தர சாமி வாழி
கலமுடைய சிவனடியார் உருத்தி ராக்கமுங்
களிமகிமைத் திருநீறுங் கலந்துவாழி.

# சாதியைக் கெடுக்கச் சாத்தியப்படுமா?

இந்நாளில் நமக்கு எதிரே நின்று போராடி நிற்குமியக்கங்கள் பலவுள்ளன. இவை கலி ஐயாயிரப்புரட்சியின் பலன் என்று சொல்வது மிகையாகாது. நமது முன்னோர்கள் சகிக்க முடியாத துன்பங்களைச் சில சமயங்களில் அனுபவித்திருப்பதை நாம் சரித்திர வாயிலாக அறிகிறோம். அவர்கள் வழிவந்த நாங்களும் கஷ்டங்களை ஏற்று அனுபவிப்பதில் என்னவியப்பிருக்கிறது.

வேதங்களும் ஆகமங்களும் உள்ளவரையில் அவற்றின் வழியே நடப்பவர்கள் விலகி வேறு வழிகளிலே நடக்கவே மாட்டார்கள். அரசனுடைய சட்டத்தை மீறி நடந்தால் என்னகிடைக்குமோ? அது போலவே கடவுளுடைய சட்டத்தை மீறி நடந்தால் கிடைப்பது இன்னதென்று அவர்களுக்கு நன்றாகத்தெரியும். உலகத்தில் தோன்றி உலாவுகிற புதிய இயக்கங்கள் ஒவ்வொன்றும் நீடித்து நிலைநில்லாமல் மிகச் சொற்ப காலத்தில் மறைந்து போவதை நாம் கண்ணுற்கண்டு வருகிறோம். விதவா விவாகம் புனர்விவாகம் கப்பல் யாத்திரை பிராமணரல்லாதார் என்னும் இயக்கங்கள் எங்கே? போனவிடந் தெரியாமல் மறைந்து விட்டமை கண்கூடே யன்றோ? அவை போலவே சாதியைக் கெடுக்கச் சமயம் நோக்கி முயலும் இந்த இயக்கமும் சில காலத்தினுள் மாய்ந்து போதல் திண்ணமேயாம்.

ஜாதிக் கட்டுப்பாட்டை வேரோடு அழித்துவிட ஒரு வீரகேசரி அல்ல ஆயிரங் கேசரி ஒன்று கூடி வீரமுழக்கஞ் செய்தபோதிலும் பயனுண்டாதல் குதிரைக்கொம்பேயாகும். பல்லாயிரம் ஆண்டுகளாக நிலைத்து நிற்கும் சாதி வேற்றுமையாகிய சரபம் ஒன்றுக்கு முன் ஆற்றல் இழந்துபோகும் கேசரி ஆயிரம் முழங்கினாலும் அம்முழக்கம் பயனின்றி ஒழிதல் நிச்சயமேயாகும்.

இந்நாளில் கலி புருடர் சிலர் தோன்றி ஜாதிக் கட்டைக் குலைக்கப் பார்த்தாலும் அது இன்னும் நன்றாக வேரூன்றிச் செழித்து வளருமேயன்றிக் கெட்டொழிதல் இல்லை. கலிகாலத்தின் பயனாக ஐயாயிரப்புரட்சி வருமென்று முன்பே நம்முன்னோர் சொல்லியிருக்கிறார்கள். அப்புரட்சி இப்போது தோன்றி யிருக்கிறது.

இந்த நெருக்கடியான காலத்தை நாம் தைரியமாகவும் சந்தோஷமாகவும் ஏற்றுக்கொள்வதோடு மேலும் இந்தவிதமான கலிகால நவீன இயக்கங்கள் தோன்றி நம்முடன் தோள் தட்டிப் போர்புரிய எழினும் நாம் சாத்துவிக முறையைப் பின்பற்றிக் கலங்காத நெஞ்சத்தோடு அசைவின்றி இருத்தல் வேண்டும். இருப்போமாயின், சில காலத்தில் தாமாகவே இந்தப் புதிய இயக்கங்கள் வந்த வழி கூடத் தெரியாமல் மறைந்துவிடும்.

பசு பசுவாகவே இருக்குமன்றி எருமையாக மாறமாட்டாது. குதிரை கழுதையாக மாறுமா? குதிரைச் சாதி மாறாமல் குதிரைச் சாதியாகவே நிலவும் இதைமாற்ற நினைப்போர் மதி சாலவும்வியக்கற்பாலதேயாம்.

சமயப்பற்றையும் சாதிப்பற்றையும் நீக்கிவிட முயல்வது வீண் முயற்சியென்பதைத் தற்கால நாகரிகக்கலி அவதார உத்தம புருடர் தமது திருவுளத்திலே நன்றாகப் பதித்து வைத்தல் வேண்டும்! ஆலயப் பிரவேச சட்டம் வலி குறைந்து அழிந்த பின்னுஞ் சாதியைக் கெடுக்க முயற்சிப்பது எவ்வளவு அறியாமை! —ஞானசித்தி பக்கம் உகூஅ.

———



(க - ரை) மனம் தன்னை நோக்குதலால் சிவம் தோன்றப் பெற்று அச் சிவப் பற்றும் அற்றுச் சிவமாயிருப்பவனே சிவயோகியாவான் என்பதாம்.

சிவப்பற்று அறுதலாவது சிவனைப் பற்றி நிற்கின்றே மென்னும் போதம் அறுதல். அப்போதம் அற்ற காலத்து, பற்றுகிறதானும் பற்றுதற்றொழிலும் பற்றப்படு பொருளுமாகிய வேற்றுமை யற்றுச் சிவமாயே யிருந்து சிவானந்தத்தை அநுபவித்துக் கொண்டிருப்பன். அநுபவிப்பது, அநுபவித்தல், அநுபவிக்கப்படுவது என்னும் வேற்றுமையின்றி அநுபவம் எவ்வாறு கூடுமெனின், உயிரானது, உடலாயிருந்து உடலையநுபவிப்பது போல் சிவமாயிருந்து சிவனையநுபவித்தல் கூடுமென்க. இதனை, "தானான தன்மயமே யல்லாலொன்றைத் தலையெடுக்க வொட்டாது தலைப்பட்டாங்கே, போனாலுங் கர்ப்பூரதீபம் போலப் போயொழிப்பதல்லாது புலம் வேறின்றாம், ஞானாகாரத்தினொடு நேய மற்றை ஞாதிருவும் நழுவாமல் நழுவி நிற்கும், ஆனாலு மிதன் பெருமை யெவர்க்கார் சொல்வ ரதுவானா லதுவாவ ரதுவே சொல்லும்". என்னுந் தாயுமானசுவாமிகள் திருவாக்கானறிந்து கொள்க.

நடுவு என்றவிடத்து உகரம் சாரியை.

நிறுத்திக்கொள்வதற்கு ஓர் இடம் வேண்டுமாதலின் தன்னிடத்தி லென்பது வருவிக்கப்பட்டது. தன் என்பது மனம். நிறுத்திக்கொண்டால் நெஞ்சில் மருவி நிற்கும் ஒளி தெளிவுறவுறும் என்பதனாலும் நிறுத்துதற்குரிய இடம் மனமென்பது பெறப்படும்.

மனத்தை அம்மனத்தினிடத்தில் நிறுத்துதலாவது - மனமென்பது, பொருள்களைச் சுட்டி இதுவோ அதுவோ என்று உயிர் ஐயுற்று நிற்றற்குக் கருவியாகிய நினைவுரூபம். இந்த நினைவை, வெளியேயுள்ள பொருள்களிலும், உள்ளே யுள்ள தானங்களிலும் செல்ல வொட்டாது அந்த நினைவையே நினைக்கச்செய்தல் தன்னிடத்தில் நிறுத்துதல். அங்ஙனம் நிறுத்தும் பொழுது, அந்நினைவு, தன்னைக் கருவியாகக்கொண்ட ஆன்மாவினிடத்து நிலைபெறும். பெறவே, ஆன்மாவை வியாபித்திருக்கும் ஒளிரூபமான சிவந் தோன்றும். நினைவை நோக்கில் சிவந்தோன்றுமென்னும் இவ்வுண்மையை, "அத்துவித அனுபவத்தை யனந்த மறை யின்னமின்ன மறியே மென்னும், நித்தியத்தை நிராமயத்தை நிர்க் குணத்தைத் தன்னருளால் நினைவுக்குள்ளே, வைத்து வைத்துப் பார்ப்பவரைத் தானாக எந்நாளும் வளர்த்துக் காக்கும், சித்தினை மாதுவெளியை தன்மயமாமானந்தத் தெய்வந்தன்னை." "மனமே நின்சென்ம தேயத்தில் நீ செல்லல்வேண்டும்." என்னும் தாயுமான சுவாமிகள் மண்டலத்தின் எ. க. செய்யுட்களாலு மறிக.

நெஞ்சிலே என்றவிடத்து ஏகாரம் அசை.
உறவு—கலத்தல். உள்ளம் - மனம்,
உரையிற்சேர்த்துக் கொள்க. (௩௰)

(அ - கை) கேவல சகல அவத்தைகளை நீக்கிச் சுத்தாவத்தையில் நிற்றலே முத்திநெறியெனக் கூறுகின்றார்.

31. நித்திரையும் பராக்கினையு நீக்கிச் சுத்த
மொருநிலையு நீங்காம னிறுத்திக் கொண்டாற்
சித்தமொரு பொருளினையுஞ் சேரா தாகிச்
சேரும்வகை சேராமற் செல்ல நின்று
மத்தமன முதலான வவத்தை யொன்று
மருவாத வகைநிற்கு மதுவே யாகும்
முத்திநெறி யென்றுமறை யிடைவி டாது
முறையிடவு மாகமங்கண் மொழியுங் காணே.

(இ - ள்) நித்திரையும் - கருவிகளொன்றுந் தொழிற்படாத துரியாதீதமான கேவல நிலையினையும், பராக்கினையும் - எல்லாக் கருவிகளுந் தொழிற்படும் சாக்கிரமாகிய சகல நிலையினையும், நீக்கி - பொருந்தாதவாறு விலக்கி, சுத்தம் ஒரு நிலையும் நீங்காமல் நிறுத்தி கொண்டால் - சுத்தமாகிய ஒரு நிலையை மட்டும் விடாது பற்றிக்கொள்க. கொள்ளின், சித்தம் ஒரு பொருளினையும் சேராது ஆகி-மனமானது ஒருபொருளையும் பற்றாத நிலையையுடையதாய், சேரும்வகை சேராமல் செல்ல நின்று - பற்றுதற்குரிய விருப்பமும் பொருந்தாதவாறு கெடச் சலனமின்றி நிலைபெற்று, மனம் மத்தம் முதலான அவத்தை ஒன்றும் மருவாத வகை நிற்கும் - மனம் மயங்குங் கனவு முதலிய நிலையொன்றும் பொருந்தாதவாறு நிற்கும், அதுவே முத்திநெறி ஆகும் என்று மறை இடைவிடாது முறையிடவும் ஆகமங்கள் மொழியும் - அந்தச் சுத்த நிலையே முத்திக்கு வழியாகு மென்று வேதங்கள் எப்பொழுதும் முறையிடவும் ஆகமங்களும் உபதேசிக்கும். காண் - இவ்வுண்மையை அறிவாயாக எ - று.

(பொ - ரை) கருவிகளொன்றுந் தொழிற்படாத துரியாதீதமான கேவல நிலையினையும், எல்லாக் கருவிகளுந் தொழிற்படும் சாக்கிரமான சகல நிலையினையும், பொருந்தாதவாறு விலக்கிச் சுத்தமாகிய ஒரு நிலையைமட்டும் விடாது பற்றிக் கொள்க. கொள்ளின், மனமானது ஒரு பொருளையும் பற்றாத நிலையை உடையதாய், பற்றுதற்குரிய விருப்பமும் பொருந்தாதவாறு கெடச் சலனமின்றி நிலைபெற்று மனம் மயங்குங் கனவு முதலிய நிலையொன்றும் பொருந்தாதவாறு நிற்கும். அந்தச் சுத்த நிலையே முத்திக்கு வழியாகு மென்று வேதங்கள் எப்பொழுதும் முறையிடவும் ஆகமங்களும் உபதேசிக்கும். இவ்வுண்மையை அறிவாயாக எ - று.



(க - ரை) கருவிகளோடு கூடாத துரியாதீத நிலையினையும், கருவிகளோடு கூடிய சாக்கிர நிலையினையும் பொருந்தாது, சாதனத்தைச் செய்யுங்கால் கனவு முதலிய அவத்தைகளிற் செல்லாமற் காத்தலே முத்திநெறியென்பதாம்.

நித்திரை-கருவிகளொன்றுமில்லாத துரியாதீத நிலை. இது, சகலத்திற் கேவல மெனப்படும்.

பராக்கு - பலபொருள்களையும் பார்க்கும் சாக்கிரம். இது, சகலத்திற் சகலமெனப்படும்.

சாதனம் செய்யும் நிலை சகலத்திற் சுத்த மெனப்படும்.

கேவல சகல சுத்தமென்னும் மூன்றும், காரண காரிய மெனத் தனித்தனி இருவகைப்படும். அவற்றுள்,

காரண கேவலம் - ஆணவமலமாத்திரத்தோடு கூடிநிற்கும் அநாதிநிலை.

காரண சகலம் - மலத்தில் நின்று நீங்கி, கருவிகளோடு கூடி, முத்தியடையும்வரை பிறந்திறந்துழலு நிலை. இதிற்றான் காரிய கேவல சகல சுத்தங்கள் நிகழும்.

காரண சுத்தம் - சிவனோடு பிரிப்பின்றி நிற்கும் பரமுத்தி நிலை.

காரிய கேவலம் - நித்திரை செய்யும் நிலை.

காரியசகலம் - எல்லாக் கருவிகளோடுங் கூடித் தொழிற்படு நிலை.

காரியசுத்தம் - சாதனம் செய்யும் நிலை. இவை, மேல் உ௫-வது செய்யுளுரையிலுங் கூறப்பட்டுள்ளன.

இவற்றின் விரிவனைத்தும் சிவஞான சித்தியார் நான்காம் சூத்திரம் மூன்றாம் அதிகாணத்துட் காண்க.

ஈற்றிலுள்ள ஏகாரம் அசை. (௩௧)

(அ - கை) சாதனத்தால் சிவானுபவம் வந்தபின்னர், அவ்வநுபவத்தை இடைவிடாது பயிலவேண்டு மெனக் கூறுகின்றார்.

32. பொருண்முழுது மடையாமன் மனத்தை வாங்கி
நெஞ்சகத்தே பொருந்துவித்த பொழுது தோன்றும்.

186948

இருளறுநன் ஞானவொளி யதுவி ளங்க
வெப்பொழுதும் வாதனையே யியற்றிக் கொள்க
பரமதுவா யிலதாகி யங்க மின்றிப்
பற்றின்றி யவத்தையின்றி நின்ற வொன்றை
உரனுடைய தியானிகளா யுறைகின் றாரே
பிறப்பிலா வந்நிலத்தை யுறுகின் றாரே.

(இ - ள்) பொருள் முழுதும் அடையாமல் - பொருள்க ளொன்றையும் பற்றாதவாறு, மனத்தை வாங்கி - மனத்தைத் திருப்பி, நெஞ்சு அகத்தே பொருந்து வித்தபொழுது - மனத்தின் உள்ளாக நிற்கும் தானுகிய ஆன்மாவினிடத்துச் செலுத்தியகாலத்து, இருள் அறும் நல்ஞான ஒளி தோன்றும் - (சிவனை யறிய வொட்டாது மறைத்து நின்ற) ஆணவ இருள் நீங்கும். சிவஞானமாகிய ஒளி விளங்கித் தோன்றும், அது எப்பொழுதும் விளங்க வாதனையே இயற்றிக் கொள்க - தோன்றிய பின்னர் அந்த ஒளி நீங்காது விளங்கித் தோன்றுமாறு அதன் பயிற்சினையே செய்து கொள்க. அதுவாய் இலதாகி அங்கம் இன்றி பற்று இன்றி அவத்தையின்றி நின்ற பரம் ஒன்றை - பொருள்களுடன் கலந்து அதுவதுவாயும், தன்மையால் அவற்றின் வேறாயும், மாயாகாரியமான வடிவமின்றியும், பற்று இன்றியும், அவத்தை யின்றியும் நின்ற சிவமாகிய ஒரு பொருளை, உரன் உடைய தியானிகளாய் உறைகின்றாரே - (அந்தச் சிவஞானத்தால்) அறியும் அறிவுடையதியானிகளாக நிலைபெற்றிருப்பவரே, பிறப்பு இலா அந்நிலத்தை உறுகின்றார் - மீண்டு பிறவாத முத்தி நிலத்தை அடைகின்றவ ராவர் எ - று.

(பொ - ரை) பொருள்க ளொன்றையும் பற்றாதவாறு மனத்தைத் திருப்பி மனத்தினுள்ளாக நிற்கும் தானுகிய ஆன்மாவினிடத்துச் செலுத்திய காலத்து, சிவனை யறியவொட்டாது மறைத்து நின்ற ஆணவ இருள் நீங்கும்; சிவஞானமாகிய ஒளி விளங்கித் தோன்றும். தோன்றிய பின்னர், அந்த ஒளி நீங்காது விளங்கித் தோன்றுமாறு அதன் பயிற்சியினையே செய்துகொள்க. பொருள்களுடன் கலந்து அதுவதுவாயும், தன்மையால் அவற்றின் வேறாயும், மாயாகாரியமான வடிவமின்றியும், பற்றின்றியும், அவத்தையின்றியும் நின்ற சிவமாகிய ஒரு பொருளை, அந்தச் சிவஞானத்தால் அறியும் அறிவுடையதியானிகளாக நிலைபெற்றிருப்பவரே, மீண்டு பிறவாத முத்தி நிலத்தை அடைகின்றவராவர் எ - று.

(க - ரை) சிவஞானத்தால் சிவனை இடைவிடாது அறிந்துகொண்டிருக்கும் சிவஞானிகள் மீளப் பிறவார் என்பதாம்.



தோன்றிய ஞானத்தை இடைவிடாது பயிலவேண்டுமென்று கூறுதற்கு, தோன்றுமென்று மேற் கூறியதனை அநுவதித்தார்.

வாதனை - வாசனை யென்பதன்றிரிபு. வாசனை - பயிற்சி.

எல்லாப் பொருள்களோடும் கலந்து அதுவதுவாயும் தன்மையால் வேறாயும் நிற்கும் சிவப்பொருளுக்கு வடிவம் ஞானமே யென்பது தோன்ற அங்கமின்றி யென்றார்.

மாயா காரியமாகிய உடலால் பற்றுதலும், பற்றுதலால் அவத்தைகளும் நிகழுமென்பது தோன்ற, அங்கமின்றி பற்றின்றி அவத்தையின்றி யென முறைப்படவைத்தார்.

உரன் - இவ்விடத்து அறிவின் மேல் நின்றது. †உரனென்னுந் தோட்டியான் என்ற விடத்துப் போல.

உரனுடையதியானிகளாய் உறைகின்றாரே என்னும் அநுவாதத்தால், உறைக என்பது பெறப்படும்.

ஈற்றிலுள்ள ஏகாரம் - அசை. (௩௨)

(அ - கை) சுகதுக்க முதலிய தொடர்புகளை நீக்கினவரே சாதனஞ் செய்தற் குரியவரெனக் கூறுகின்றார்.

33. துக்கசுக மாசைவெறுப் பென்று கூடுந்
துவந்துவங்க ளிரண்டவை போற் சொல்லப்பட்ட
மிக்கதெய்வ மடவார்கள் தன்மா தன்ம
மெய்ப்பலன்கள் பெறுவபே றுளவா மென்று
தொக்கவுள மதுவாகும் பிறப்பை யாக்குந்
தொடர்பெனவே துணிந்தந்தத் தொடர்பை யாக்கும்
தக்கபொருட் சார்வுயிர்ச்சார் வடைய நீக்குந்
தவத்தோர்பாற் சிவம்வந்து சாருங்காணே.

(இ - ள்) கூடும் துவந்துவங்கள் துக்கசுகம் (என்று இரண்டு) ஆசை வெறுப்பு என்று இரண்டு - பொருந்தும் தொடர்ச்சிகள் துக்கசுகம் என்று இரண்டாம். விருப்பு வெறுப்பு என்று இரண்டாம், அவைபோல் சொல்லப்பட்ட மிக்க தெய்வம் மடவார்கள் (என்று இரண்டு) - அவற்றைப் போலத் தொடர்பாகச் சொல்லப்பட்ட மேலான தெய்வங்களும் அவற்றின் சத்திகளும் என்று இரணடாம், தன்ம அதன்மம் (என்று இரண்டு) - அறமும் பாவமும் என்று இரண்டாம், மெய்ப்பலன்கள்

† திருக்குறள். நீத்தார் பெருமை. செ. ௪.

பெறுவபேறு (என்று இரண்டு) - அறம் பாவங்களுக்குரிய உண்மையான பலன்களைப் பெறுகின்றவர்களும் பெறுதலும் என்று இரண்டாம், உளவாம் என்று தொக்க உளம் அதுவாகும் - இவ்வாறு உள்ளனவாகச் சொல்லப்பட்ட தொடர்புகளோடு கூடிய மனம் அந்தத் தொடர்ச்சி ரூபமாய் விளங்கும், தொடர்பு பிறப்பை ஆக்கும் எனவே துணிந்து - இந்தத் தொடர்பு பிறப்பிறப்புக்களை உண்டுபண்ணும் என்றே நிச்சயித்து, அத் தொடர்பை ஆக்கும் தக்கபொருள்சார்வு உயிர்ச்சார்வு-அந்தத் தொடர்பைத் தோற்றுவிக்கும் தகுதியுடைய பொருட்சார்பு உயிர்ச்சார்புகளை, அடைய நீக்கும் தவத்தோர் பால் சிவம் வந்துசாரும் - ஒருசேர நீக்கும் ஞானிகளிடத்து சிவம் வெளிப்பட்டுத் தோன்றும், காண் - இவ்வுண்மையினை அறிவாயாக எ - று.

(போ - ரை) பொருந்தும் தொடர்ச்சிகள் துக்க சுகம் என்று இரண்டாம். விருப்பு வெறுப்பு என்று இரண்டாம். அவற்றைப் போலத் தொடர்பாகச் சொல்லப்பட்ட மேலான தெய்வங்களும் அவற்றின் சத்திகளும் என்று இரண்டாம். அறமும் பாவமுமென்று இரண்டாம். அறம் பாவங்களுக்குரிய உண்மையான பலன்களைப் பெறுகின்றவர்களும் பெறுதலும் என்று இரண்டாம். இவ்வாறு உள்ளனவாகச் சொல்லப்பட்ட தொடர்புகளோடு கூடிய மனம் அந்தத் தொடர்ச்சி ரூபமாய் விளங்கும். இந்தத்தொடர்பு பிறப்பு இறப்புக்களை உண்டுபண்ணுமென்றே நிச்சயித்து, அந்தத் தொடர்பைத் தோற்றுவிக்குந் தகுதியுடைய பொருட்சார்பு உயிர்ச் சார்புகளை ஒருசேர நீக்கும் ஞானிகளிடத்து, சிவம் வெளிப்பட்டுத் தோன்றும். இவ்வுண்மையினை யறிவாயாக எ - று.

(க - ரை) சுகதுக்கம் முதலிய தொடர்புக்குக் காரணமான உயிர்ச் சார்பு பொருட்சார்புகளை அறவே நீக்கிச் சாதனத்தில் உறைத்து நிற்கும் ஞானிகளிடத்துச் சிவம் விளங்கித் தோன்றும் என்பதாம்.

என்று இரண்டு என்பதை யெவ்விடத்துங் கூட்டுக.

தொகுதல் - கூடுதல்.

பொருட் சார்பு - எனது எனப்படும் திரவிய முதலியவற்றின் பற்று.

உயிர்ச்சார்பு - யான் எனப்படும் உடற்பற்று.

இவ்விரண்டு பற்றும் நீங்கின், சுகதுக்கம் முதலிய எல்லாத் தொடர்புகளும் நீங்கும்; சிவந்தோன்றும். * ''யானென தென்னுஞ் செருக்கறுப்பான் வானோர்க் குயர்ந்த வுலகம் புகும்'' என்பதும் இக் கருத்துப்பற்றியது. தெய்வமும் தெய்வசத்தியு மென்ற தொடர்பும் நீங்கவேண்டு மென்ற இது

* திருக்குறள். துறவு. செ. சு.



கிரீச்சுரவாத மாகாதோ எனின், ஆகாது. எவ்வாறெனின், சிவமும் சிவசத்தியுமல்லாத ஏனைய தெய்வங்களும் அவற்றின் சத்திகளும் பிறப்பிறப்புக்களைப் பொருந்தும் உயிர் வர்க்கமாதலின், அவற்றின் வழிபாட்டால் பிறப்பிறப்புக்கள் நீங்கா. இக்கருத்தினை ¶“மற்றத் தெய்வங்கள் வேதனைப் படும் இறக்கும் பிறக்கும் மேல் வினையுஞ் செய்யும்'' என்னுந் திருவாக்கா லறிந்து கொள்க. ஆகவே, பிறப் பிறப்புக்குட்படாத பதிவர்க்கமாகிய சிவமும் சத்தியும் விநாயகரும் சுப்பிரமணியரு மல்லாத ஏனைய பசுவர்க்கமாகிய தெய்வங்களையும் சத்திகளையும் வழிபடுதலால் பிறவியறு தென்பது தோன்ற, அந்தத் தெய்வங்களும் சத்திகளுமே பிறப்பையாக்குந் தொடர்பாக இங்கே கூறப்பட்டவாறு மென்க.

ஈற்றி லுள்ள ஏகாரம் அசை. (௩௩)

(அ - கை) சிவஞானச் செயலுடைய சீவன் முத்தன் தேகத்தைப் பற்றிய சிந்தனையைச் செய்யான் எனக் கூறுகின்றார்.

34. உடம்புடனே யுபாயத்தால் விளங்கித் தோன்று
முள்ளொளியாம் பரசிவம்வந் துற்ற போதே
யிடம்படவே சீவன்முத்த னாகும் விட்டாற்
செல்லுமவன் பரமுத்தி தன்னைச் சேர
விடம்படுமெய்ஞ் ஞானியுடல் வேண்டா மென்றே
யிப்பொழுதே வலியவிட வெண்ண வேண்டா
கடன்கொள்வினை தன்னளவு நின்றே யந்தக்
காயமுமங் கதன்பின்னே கழியுங் காணே.

(இ - ள்) உடம்பு உடனே உபாயத்தால் உள் ஒளியாம் பரசிவம் வந்து விளங்கி தோன்றும் - சரீரத்தோடு கூடியிருக்கும் பொழுதே ஞான சாதனத்தால் ஆன்மாவினுள் ஒளி ரூபமாய் விளங்கும் பரமசிவம் வெளிப்பட்டு விளங்கித் தோன்றும், உற்றபோதே இடம்பட சீவன் முத்தன் ஆகும் - சிவம் விளங்கித் தோன்றிய பொழுதே நிச்சயமாகச் சீவன் முத்தனாவன், விட்டால் அவன் பரமுத்தி தன்னை சேர செல்லும் - சரீரம் நீங்கினால் அந்தச் சீவன் முத்தன் பரமுத்தியை அடைவன், இடம்படு மெய் ஞானி - விரிவான உண்மைஞானத்தைப் பெற்றவன், உடல் வேண்டாம் என்று இப்பொழுதே வலியவிட எண்ணவேண்டா - பரமுத்திக்குத் தடையான சரீரம் வேண்டா மென்று சிவம் தோன்றப்பெற்ற பொழுதே வலுவில் அதனை விடுதற்குக் கருதவேண்டாம், அந்த காயமும் கடன் கொள்

¶ சிவஞானசித்தியார். உம் சூ-ம். செ. உரு.

வினை தன் அளவும் நின்று அதன் பின் கழியும் - அந்தச் சரீரமும் நியதியாகக் கொள்ளப்பட்ட வினை உள்ள அளவும் நின்று அவ்வினை நீங்கியபின் நீங்கும், காண் - அறிவாயாக எ - று.

(பொ - ரை) சரீரத்தோடு கூடியிருக்கும்பொழுதே ஞான சாதனத்தால் ஆன்மாவினுள் ஒளி ரூபமாய் விளங்கும் பரமசிவம் வெளிப்பட்டு விளங்கித் தோன்றும். சிவம் விளங்கித் தோன்றியபொழுதே நிச்சயமாகச் சீவன் முத்தனாவன். சரீரம் நீங்கினால் அந்தச் சீவன் முத்தன் பரமுத்தியை அடைவன். விரிவான உண்மை ஞானத்தைப் பெற்றவன், பரமுத்திக்குத் தடையான சரீரம் வேண்டாமென்று, சிவந்தோன்றப் பெற்றபொழுதே வலுவில் அதனை விடுதற்குக் கருதவேண்டாம். அந்தச் சரீரமும் நியதியாகக் கொள்ளப்பட்ட வினை உள்ள அளவும் நின்று அவ்வினை நீங்கிய பின் நீங்கும், அறிவாயாக எ - று.

(க - ரை) சீவன் முத்தன், பரமுத்திக்குத் தடையான தேகத்தை வலுவில் நீக்கக் கருதான் என்பதாம்.

உடம்புடனே என்ற விடத்து ஏகாரம், உடம்புடன் அடையக் கூடுமோ என்னும் ஐயம் அறுத்தலின் தேற்றம்.

வருதல் - வெளிப்படுதல்.

உற்றபோதே என்ற விடத்து ஏகாரம், காலம்தாழ்த்தலைவிலக்குதலின் பிரிநிலை.

திடம்படவே என்ற விடத்து ஏகாரம் அசை. தேற்றம்எனினும் ஆம்.

இடம்படுதல் - விரிதல். விரிந்தஞானம், சிவஞானம் ஆதலின் மெய்ஞ்ஞானமெனப்பட்டது.

என்றே, நின்றே, பின்னே, காணே என்ற இடங்களிலுள்ள ஏகாரமும், அங்கும் அசை நிலைகள்.

கடன் - நியதி.

ஞானசாதனத்தால் சிவம் விளங்கித் தோன்றியபொழுதே சீவன் முத்தனாகும் என்பது *"தெரிவரிய மெஞ்ஞானஞ் சேர்ந்தவாறே சிவம்பிரகாசிக்குமிங்கே சீவன் முத்தனாகும்" என்னுந் திருவாக்கானு மறியப்படும்.

சீவன் முத்தியாவது - தேகத்துடன் கூடியிருக்கும்பொழுது, தேகத்தை தானெனக் கருதும் சீவபோத மற்றுச் சிவபோதமாய் நிற்கும் நிலை. நியமிக்கப்பட்ட வினை உள்ள அளவும் தேகம் நிற்கும். வினைநீங்கில் தேகம்

* சிவஞான[illegible] சு. ச.

# செய்தித்திரட்டு.

உள்ளூர்:— இம்மதி ருஉ குமாரவிநாயகர் திருக்கோயிலில் நடராஜ [அபி]டேகம் சிறப்பாக நடைபெற்றது. உ0உ மகா சிவராத்திரி நான்கு [ஜா]மங்களிலும் (நகரச்சிவாலயத்திலும்) பூஜை நடைபெறும்.

தனவைசிய நகரத்தார்களின் காரிய விசாரணை சபை:— கோயி[லூ]ர் மடாலயத்தில் தை ருஉ (16—1—1935) முற்பகலிற் கூடியது. [த]லைவர் ராஜா சர் அண்ணாமலை செட்டியாரவர்களும் அங்கத்தினர் பலரும் வந்திருந்தனர். கூட்டுக் கமிட்டி அறிக்கையின் குறையைப்பற்றி சென்னை கவர்னர், பர்மா கவர்னர், இராஜப்பிரதிநிதி, இந்தியா மந்திரி ஆகிய [அ]வர்கட்கு விண்ணப்பங்கள் கையெழுத்துச்செய்து அவைகளை அவர்கட்குச் சமர்பிக்கவும் அவர்களிடம் திருவாளர்களான கனம் ராஜா சர் அண்ணாமலை செட்டியார், மு. சித. மு. சிதம்பரம் செட்டியார், உ. அ. பெரி. மு. அருணாசலச் செட்டியார், அட்வகேட் கா. இராமநாதன் செட்டியார் ஆகிய நால்வர்களும் தூது சென்று காரியம்சாதித்து வரவும்தீர்மானிக்கப் [பெ]ற்றன.

தூது விஷயம்:—விண்ணப்பங்கள் சமர்ப்பிக்கப்பெற்றன. சென்னை [க]வர்னரவர்களையும், இராஜப்பிரதிநிதியவர்களையும் பேட்டி கண்டு பேச[லா]யிற்று.

பர்மா முதலான இடங்களிலிருந்து வந்த தூது கோஷ்டியினருடன் [ந]மது சபை அங்கத்தினர் அட்வகேட் திருவாளர், கா. இராமநாதன் [செ]ட்டியாரவர்கள் 1935 பிப்ரவரி 2உயிலும் தலைவர், கனம் ராஜா சர் [அ]ண்ணாமலை செட்டியாரவர்கள் 11உ யிலும் பம்பாயிலிருந்து வங்கமேறி [இ]ங்கிலாந்துக்குப் போயிருக்கிறார்கள். அவர்கள் காரிய சித்தியுடன் [ஷே]மே வந்துசேரக் கருணாநிதியாகிய கடவுளைப் பிரார்த்திப்போமாக.

விண்ணப்பங்களும், இலங்கை நகரத்தார். சங்கத்தின் தீர்மானமும் [அ]டுத்த திங்களில் வெளியிடுவோம்.

கோயிலூர்:— நகரத்தார்களின் காரியவிசாரணை சபையாரும், நகரத்[தா]ர்களும் தை ருஉ வந்து சுவாமி தெரிசனம் செய்து மடாலயத்தில் [அ]முதருந்தினர்.

கோட்டையூர் க. வீ. சொ. வீ. அழ. அழகப்ப ஐயா அவர்களின் [அ]றுபதாண்டு நிறைவுமணம் திருநெல்லைநாயகி சமேத கொற்றவாளீசர் [தி]ருச்சந்நிதானத்தில் தை உ0உ உத்திராட நாளில் நடைபெற்றது. அன்[றி]வு ஐம்பெருங் கடவுளர் வெள்ளி வாகனங்களில் திவ்யாலங்காரத்[துட]ன் திருவுலாப்போந்தருளினர். தை க0உ முதல் அதிருத்ரமகாபிடேக [க]ணிய யாகமும் வேதபாராயணமும் கஙஉ முதல் மகோபந்யாசங் [செ]ய்ப்பெற்றன. அந்தண சிரேஷ்டர்களும் சாதுக்களும் தனவணிக [ந]கர்களும் பிறரும் மிகுதியாக வந்து விழாவிற் கலந்துகொண்டனர். [அ]வரும் நன்கு உபசரிக்கப் பெற்றனர். தெய்வ வழிபாடாதிய[வு]ம் சிறப்பாக நிறைவேறின.

[கு]த்தன்குடி:— மாசி கஉ எருதுவிரட்டு விழாநடைபெற்றது.

குன்றக்குடி:— சத்திவேலாயுத சுவாமியின் தைப் பூசத் திருவிழா வழக்கம்போல சிறப்பாக நிறைவேறியது. இம்மதி உஎஉ தொடங்கி பங்குனி ருஉ தெப்பத்திருவிழாவும், சூஉ தேர்த்திருவிழாவும் எஉ உத்திரத்திருநாள் தீர்த்தவாரியும் மயிலாடுபாறை மண்டபப்படியும் நடைபெறும்.

மகாகும்பாபிஷேகங்கள்:— சொக்கலிங்கபுரம் சிவாலயமும், இராயவரம் முத்துமாரியம்மன் கோயிலும் தனவணிக நகரத்தார்களால் புதிதாகப் பொற்பணியொப்பக் கருங்கற்பணியாகத் திருப்பணிசெய்து மகா கும்பாபிஷேகங்களும் செய்வாசல் சிவாலயத்தில் கருணாலயம் சமைத்து அஷ்டபந்தன கும்பாபிடேகமும், புதுப்பட்டியில் கற்பகப் பிள்ளையார் சுப்பையாவேல் கோயிற் கும்பாபிடேகமும் தை உசூஉ சிறப்பாகச் செய்யப் பெற்றன.

திருக்கண்ணூர்கோயில் சிவாலயத்திருப்பணி திருக்குளத்திருப்பணியாதிய செவ்விதின் நிறைவேறின. ஆனிமீ உசஉ மகாகும்பாபிடேகம் நடைபெறும்.

பிரான்மலை:— ஸ்ரீ குமாரக் கடவுக்கு தைபூசத் திருவிழாவும் தண்ணீர்மாமலை தெண்டாயுதபாணிக்கு தை உசூஉ அஷ்டபந்தன மகா கும்பாபிடேகமும் சிறப்பாக நிறைவேறின.

குருபூஜைகள்:— விருதுநகரில் உயர்திரு கருணானந்த ஞானதேசிகரின் முதலாவது குருபூஜை மார்கழி கஅஉ அனுஷ நாளில் நடைபெற்றது. சென்னை வேதாகமோக்தசபையில், "வைதிக சைவ சித்தாந்தசண்டமாருதம்" உயர்திருசோமசுந்தர நாயகரவர்களின் ஙங-வது குருபூசை இம்மதி உசஉ நடைபெறும்.

திருவிழாக்கள்:—வைத்தீசுவரன் கோயிலில் தை சஉ முதல் உஙஉ வரைக்கும் மாசி உஉ முதல் ககஉ வரைக்கும் உஎஉ முதல் பங்குனி கசஉ வரைக்கும் களஉ யுவ சித்திரை சஉ, வைகாசி கஅஉகளிலும் திருச்செந்தூர் திருவேட்டகுடி யாதிய திருத்தலங்களில் மாசி மகத்தின் முன்னும் பின்னும் திருவிழாக்கள் ஆம்.

---

"சிவநேசன்" ஆண்டுத்தொகை விவரம்.

| | | | |
|---|---|---|---|
| உள்நாட்டிற்கு | ரூ 2--4--0 | அதற்கு மூலதனம் | ரூ 30--0--0 |
| அயல்நாட்டிற்கு | ரூ 3--0--0 | அதற்கு மூலதனம் | ரூ 40--0--0 |

தனிப்பிரதி அணா 0--3--0

விளம்பரவீகிதம்.

வியாபார விளம்பரம் பக்கம் 1-க்கு ரூ 4--0--0
நீதிமன்ற விளம்பரம் பக்கம் 1-க்கு ரூ 8--0--0

பலவான்குடி 'சிவநேசன்' அச்சியந்திரசாலையில், பத்திராதிபர்
ராம. கு.ராம. இராமசாமி செட்டியாரால் அச்சியற்றி வெளியிடப்பெற்றது.